

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி


Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 110 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 13 – புதன்கிழமை 29 நவம்பர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 110: Thiruvalluvar Year - 2054 - Karthigai 13 - Wednesday 29 November 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (6)

# இளமை முழக்கிய பொதுமை முரசம்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இளைஞர்களைப் பற்றி இப்போதுதான் எனக்கு அக்கறை ஏற்பட்டுள்ளது போலக் கற்பனை செய்து கொண்டு, இறுமாப்பு, கர்வம், ஆணவம் இவற்றின் இறுக்கமான பிடியில் சிக்கியுள்ள, அரசியலுக்குப் புதிய வரவுகள் சிலர், எடுத்த எடுப்பிலேயே, தங்களை ஏணி மீது ஏற்றி, செங்கோலைக் கையிலே கொடுத்து விடுவார்கள் மக்கள் என நம்பிக் கொண்டு, எனக்கு ஏன் இளைஞர்கள் மீது திடீர்க் கவலை என்று கேட்டுள்ள கிறுக்குத்தனமான கேலியைச் சில ஏடுகள் வெளியிட்டிருப்பதைக் கண்டு வியந்தேன். சிரிப்பையும் அடக்க இயலவில்லை.

பழுத்த பழமாம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பகுத்தறிவுப் பிரச்சாரத்தை இளமைப் பருவத்திலேயே தொடங்கிவிட்டதை நாடறியுமே!


அந்தத் தென்னாட்டுச் சாக்ரடீசின் தன்னிகரற்ற தளபதியாக விளங்கிய அறிஞர் அண்ணா, தனது 29வது வயதில் பெரியாரின் பேரன்பைப் பெற்று, திராவிடர் இயக்கத்தின் தளபதியாகவே போற்றப்பட்டது, அவரது நல் இளமைக் காலத்தில் தானே!

அவர் எழுதத் தொடங்கி இடையில் நிறுத்தியுள்ள திராவிட இயக்க வரலாறு, என் தம்பியினால் தொடர்ந்து எழுதப்படும் என எந்த இளைஞனைச் சுட்டிக் காட்டினார்? அன்னையென அவரை நேசித்த என்னையல்லவா? அவரது ஆணைக்கேற்ப இந்த இயக்கத்தில் தொடர் அத்தியாயங்களை உன் போன்ற உடன்பிறப்புகளின் உறுதுணையோடு எழுதிக் கொண்டிருக்கிறேன். அதனால், என்னைப் பார்த்து எவ்வளவுதான் மக்கள் புகழ் மாலைகளைக் குவித்துக் கொண்டிருந்தாலும், அடக்கமான போக்குத்தான் அரசியலில் அனைவருக்கும் இணக்கமான போக்கு என்பதை உணர்ந்து நடப்பவன் மட்டுமல்ல, என் உடன்பிறப்புகளும் அவ்வாறு நடக்க வேண்டுமென்று விழைபவன் நான்.

ஒரு முறை சென்னைக் கடற்கரையில், ஐந்து லட்சம் பேர் நிறைந்த கூட்டத்தில், அண்ணா



17-வது வயதில் கார்ல் மார்க்ஸ்



இளம் வயதில் பிரெடரிக் ஏங்கல்ஸ்

பேசும்போது குறிப்பிட்டார் - "பண்டித நேரு, கட்டி முடிக்கப்பட்ட கோபுரம் - நான் கொட்டிக் கிடக்கும் செங்கல்!" என்பதாக! அந்த உரை அண்ணாவை கோபுர உயரத்துக்கு மட்டுமல்ல!

**கலைஞர் கடிதம்**

இமயக் கொடு முடி உயரத்துக்கு ஏற்றி விட்டது.

அந்த அண்ணனின் அடக்க சுபாவத்தில் அணுவளவாவது பெற்றிருக்க வேண்டுமென்ற என் அவாவின் அடையாளமே, 1940இல் நான் அண்ணாவின் "திராவிட நாடு" இதழில் எழுதிய "இளமைப்பலி!" - அடுத்து, நடிகவேள் நாடக மன்றத்துக்கு எழுதித் தந்த நாடகம் "இளைஞன் குரல்!" - "இளமைத் துடிப்பு" என்ற தலைப்பில் மாநாடுகளில் நான் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவுகள்.

இதோ, உலகில் தோன்றிய புரட்சிக்காரர்கள் - தலைவர்கள், மேதைகள் எனப்படும் புகழேந்திகள், மறைந்தும் மறையாத மாவீரர்கள், கொள்கைக் குன்றங்கள் - அனைவருமே இளம் வயதினர் - அவர்கள் இயற்றிய சாதனைகளுக்கு, அவர்தம் இளமையும் ஒரு துணைக் காரணமென்பேன் - இதோ, என்றென்றும் நினைவில் வைத்துக் கொள்வீர் - நெஞ்சில் நிறுத்திக் கொள்வீர்! - நான் இக்கடிதங்கள் வாயிலாகத் தருகின்ற பட்டியலை!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## தலைவர் கலைஞரை சொந்தச் சகோதரராகவே மதித்து நடத்தியவர்!

## வி.பி.சிங்குக்கு தாய்வீடு உ.பி. என்றால் தமிழ்நாடுதான் தந்தை வீடு! எனவே

# நாம் அனைவரும் சமூக நீதிக் குடும்பமே!

## முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலைத் திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 29-**

**முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, "தலைவர் கலைஞர் அவர்களை சொந்தச் சகோதரராகவே மதித்து நடத்தியவர் வி.பி.சிங் அவர்கள்" என்றும் "வி.பி.சிங் அவர்களுக்கு தாய்வீடு உத்தரபிரதேசம் என்றால் தமிழ்நாடு தான் தந்தைவீடு" என்றும் எனவே "நாம் அனைவரும் சமூக நீதிக்குடும்பமே" என்று கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2023) சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களின் முழு திருவுருவச் சிலையை திறந்து வைத்து, சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற மேனாள் இந்தியப் பிரதமர் வி.பி. சிங் அவர்களின் சிலை திறப்பு விழாவில் ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:-

'இந்தியா முழுமைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிதாமகர்' இந்திய நாட்டின் பிரதமராக இருந்த வி.பி.சிங் அவர்களுடைய திருவுருவச் சிலையை, மாநிலக் கல்லூரியில் திறந்து வைத்துவிட்டு நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்திருக்கின்ற வகையில், இந்த விழாவில், பங்கேற்றுள்ள சிறப்பு விருந்தினர்களான உத்தர பிரதேச சிங்கம் முலாயம் சிங் அவர்களின் மகன் அகிலேஷ் அவர்களே!

வி.பி.சிங் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்களே!

மூத்த அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களே! சிலையை சிறப்பாக அமைத்து தந்து இந்த விழாவை மிகுந்த சிறப்போடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் எ.வ.வேலு அவர்களே! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களே! அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே! இந்த சமூகநீதி விழாவில் பங்கெடுத்துள்ள பல்வேறு இயக்கங்களின் தலைவர்களாம் அண்ணன் வைகோ அவர்களே, அண்ணன் முத்தரசன் அவர்களே, பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் காதர் மொஹைதீன் அவர்களே, என்னுடைய இனிய சகோதரர் தொல் திருமாவளவன் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

வி.பி.சிங் அவர்களுக்குச் சிலை அமைக்கின்ற மகத்தான வாய்ப்பு கிடைத்ததை எண்ணி இன்றைக்கு நான் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் இருக்கிறேன்!

150 ஆண்டு பழமை வாய்ந்த மாநிலக் கல்லூரி வளாகத்தில், வி.பி.சிங் அவர்களின் அருமை நண்பர், தலைவர் கலைஞர் அவர்கள் நீடுதுயில் கொண்டிருக்கின்ற கடற்கரை சாலையில் சமூகநீதியின் சின்னமாம் வி.பி. சிங் அவர்களுக்கு சிலை அமைக்கப் பட்டுள்ளது.

**ஆதிக்க சக்திகளை எதிர்த்து கலைஞரின் கர்ஜனைக் கவிதை!**

எண்ணிப் பார்க்கிறேன்... மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை பிரதமர் வி.பி.சிங் அவர்கள்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2023), சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களின் முழு திருவுருவச் சிலையை சிறப்பு விருந்தினரான உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் அவர்களின் துணைவியார் திருமதி சீதா குமாரி, மகன் அஜயா சிங் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரது முன்னிலையில் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், மு.பெ.சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 29-11-2023

# உத்தரகாண்ட் சோகம்

**தே**ஜஸ் போர் விமானத்தில் பிரதமர் நரேந்திர மோடி பயணித்த காட்சிகள் ஊடகங்களில் வெளியானது. போர் விமானத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த பிரதமர், விமானி உடுத்தும் உடைகளை அணிந்திருந்தார்.

“தேஜஸ் போர் விமானத்தில் வெற்றிகரமாக நான் பறந்தேன். விமானத்தில் பறந்தது நம்ப முடியாத செழுமையான அனுபவத்தையும், நமது நாட்டின் உற்பத்தித் திறனில் நான் வைத்துள்ள நம்பிக்கையையும் உறுதிப்படுத்தியது. நமது நாட்டின் திறன் குறித்த எனது பெருமிதம் மற்றும் நம்பிக்கையைப் புதுப்பிக்க உதவியது” - என்று பிரதமர் அவர்கள் தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

உண்மைதான். பெருமைப்படக் கூடிய தயாரிப்புதான் தேஜஸ் விமானம். அதில் அய்யமில்லை. அதே நாளில் இன்னொரு செய்தியையும் ஊடகங்கள் வெளியிட்டு இருந்தன.

**‘உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசியில் பணியின்போது ஏற்பட்ட நிலச்சரிவில் சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் 13 நாட்களாகியும் இன்னும் மீட்கப்படவில்லை’** என்பதுதான் அந்தச் செய்தி. இது இந்தியாவின் இன்னொரு உண்மையும் ஆகும். **‘அவர்களை மீட்க இன்னும் ஒரு மாதம் வரை ஆகலாம். கிறிஸ்துமஸ்க்கு அவர்கள் வீடு திரும்புவார்கள்’** என்று சர்வதேச சுரங்க மீட்பு நிபுணரான அர்னால்ஸ்ட் டிக்ஸ் சொல்லி இருக்கிறார்.

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசி அருகே சில்க்யாரா என்ற பகுதியில் சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்று வந்தது. கடந்த 12 ஆம் தேதி எதிர்பாராத விதமாக நிலச்சரிவு ஏற்பட்டது. சுரங்கத்தின் உள்ளே 41 தொழிலாளர்கள் சிக்கினர். இவர்களை மீட்பதற்கான பணி உடனடியாக தொடங்கியது. பேரிடர் மீட்புப் படையினர், சுரங்க நிபுணர்கள், தீயணைப்பு வீரர்கள் என அனைத்துத் தரப்பினரும் வரவழைக்கப்பட்டார்கள். தொழிலாளர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், ஆக்ஸிஜன் உள்ளிட்டவை குழாய்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். ஆனால் அவர்களை மீட்பது அவ்வளவு எளிதானதாக இல்லை. மீட்புப் பணி தொடங்கியதில் இருந்தே தடங்கல் ஏற்பட்டு வந்தது.

மீட்புப் பணிகள் நடக்கும் போதே நிலச்சரிவு ஏற்படும் வகையில் அந்தப் பகுதி உள்ளது. கனமான - கடினமான பாறைகளாக இல்லாமல் லேசான - உடைத்தால் தூசாக ஆகும் தன்மை கொண்டதாக அவை உள்ளன. அதனால் நிலச்சரிவு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்தப் பாறைகளை கையில் எடுத்தாலே உதிரியாய் பெயர்ந்து வரும் அளவுக்கு மென்மையாக இருக்கிறது. நுழைவு வாயில் வழியாக உள்ள இடிபாடுகளை அகற்றும்போது மேலும் மண், பாறை சரிவுகள் ஏற்படுகின்றன. இதைப் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் தோண்டத் தொடங்கினால் சுரங்கம் முழுமையாக இடிந்து விழும் அபாயம் ஏற்படும்.

சுரங்கத்திற்குள் துளையிடுவதற்காக அமெரிக்காவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆகர் இயந்திரம் மூலம் துளையிடும் பணிகள் கடந்த 25 ஆம் தேதி துவங்கின. சுரங்கத்தின் மேல்புறத்தில் இருந்து செங்குத்தாக துளை போட்டு மீட்கும் பணியையும் செய்ய முடியவில்லை. மீட்புப் பணிக்கான ஆகர் இயந்திரத்தின் பிளேடுகள், கான்கிரீட் கம்பிகளில் சிக்கிக் கொள்கிறது. கான்கிரீட் கம்பிகளை அகற்றுவதே பெரிய பிரச்சினையாக உள்ளது.

இயந்திரத்திற்கு இடையூறாக இருந்த உலோக கர்டர்கள் மற்றும் குழாய்களை அகற்றவே பல மணிநேரங்கள் ஆனது. இதையடுத்து அதை இயந்திரம் மூலம் தோண்டவே முடியாது என்ற சூழல் ஏற்பட்ட நிலையில், மீட்புப் படையினர் அவர்களே துளையிடும் பணிகளில் இறங்கி வருகின்றனர்.

சுரங்கபாதையில் சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் பணியில் சர்வதேச சுரங்கப்பாதை நிபுணர் அர்னால்ட் டிக்ஸ் ஆலோசகராக செயல்பட்டு வருகிறார். **“இது மலைப்பகுதியில் நடக்கும் மீட்புப் பணி என்பதால் மிகவும் பிரச்சினையாக உள்ளது. இதில் அவசரப்படக் கூடாது. தொடக்கத்தில் இருந்தே இந்தப் பணி என்பது வேகமாக நடக்கும் என உறுதியளிக்கவில்லை. மாறாக இந்தப் பணி சவால் நிறைந்ததாகத்தான் இருக்கும் என கூறினேன். அது தொடர்கிறது. ஆனால் தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்படுவார்கள்”** என்று சொல்லி வருகிறார். உலகப் புகழ் பெற்ற இவராலேயே எப்போது தொழிலாளர் மீட்கப்படுவார்கள் என்பதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

இதுவரை இரண்டு துளையிடும் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் பயனில்லை. கிடைமட்டமாக துளையிட்டு 47 மீட்டர் போன பிறகுதான் ஆகர் இயந்திரம் உடைந்தது.

**“தொழிலாளர்கள் சிக்கியுள்ள சுரங்கத்தின் மேல் ஓடு பகுதியை சென்றடைய 86 மீட்டர் அளவுக்கு செங்குத்தாக துளையிட வேண்டியுள்ளது. அதன்பிறகு சுரங்கப் பகுதி உடைக்கப்பட்டு தொழிலாளர்கள் மீட்கப்படுவார்கள். இது கடினமான பணி”** என்று தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள்சொல்லிஇருக்கிறார்கள். தொழிலாளர்களது குடும்பங்கள் தவித்துக் கொண்டு இருக்கின்றன. **‘இதோ மீட்புப் பணி முடிந்துவிடும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள் அதிகாரிகள். ஆனால் ஏதாவது ஒரு தடங்கல் வந்து கொண்டு இருக்கிறது. பணிகள் தேக்கமடைந்து கொண்டே போகின்றன’** என்று தொழிலாளர்களது குடும்பத்தினர் பேட்டி அளித்துள்ளார்கள்.

இது போன்ற பேரிடர் காலங்களில் மீட்புப் பணிகளுக்கான தொழில் நுட்பத்தில் எவ்வளவு பலவீனமாக இருக்கிறோம் என்பதற்கு உதாரணமாக ஆகிவருகிறது உத்தரகாண்ட் சோகம்.

●●

முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்து பெற்றார்! கழக இளைஞர் அணிச் செயலாளர்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

## தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மரியாதை!

**அரசியல் கட்சித் தலைவர்கள் – அமைச்சர்கள் – திரையுலகப் பிரமுகர்கள் – கழக முன்னணியினர் ஆயிரக்கணக்கானோர் நேரிலும் தொலைபேசியிலும் வாழ்த்து!**

**சென்னை, நவ. 29 -**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளை முன்னிட்டு தனது பெற்றோர் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் - திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார்.**

**தொடர்ந்து தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களுக்குச் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பல்வேறு கட்சித் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர், கழகத் தோழர்கள், திரையுலகப் பிரமுகர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் தொலைபேசியிலும் நேரிலும் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (27.11.2023) பிறந்தநாள் ஆகும்.

### தந்தை - முதல்வர் மு.க.ஸ்டாலின் - தாய் - திருமதி துர்கா ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றார்!

தனது பிறந்தநாளையொட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது தந்தை - கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின், தாய் திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் வாழ்த்துகளைப் பெற்றார்.

### தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - கலைஞர் நினைவிடங்களில் மரியாதை!

தொடர்ந்து தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களுக்குச் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### கோபாலபுரத்தில் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மரியாதை

இதனையடுத்து கோபாலபுரம் கலைஞர் அவர்களின் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி வணங்கினார்.

அதனையடுத்து சி.ஐ.டி. காலனி கலைஞர் இல்லத்திற்குச் சென்ற அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அங்கே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தியதோடு திருமதி இராசாத்தி அம்மையார், கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோரிடம் வாழ்த்துகளைப் பெற்றார்.

இதனையடுத்து சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் அடங்கிய மாநிலக் கல்லூரியில் சமுதாய சிற்பி வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்த நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு திறப்பு

அதனையடுத்து சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் வெலிங்டன் மேல் நிலைப்பள்ளி - தமது அறக்கட்டளை மூலம் அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

### குறிஞ்சி இல்லம் முன்பு ஆயிரக்கணக்கில் திரண்ட கழகத்தினர்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை முதலே கழகத்தினரும், அரசியல் கட்சி பிரமுகர் களும், திரையுலகப் பிரமுகர்களும் அவரது இல்லம் அமைந்துள்ள குறிஞ்சி இல்லம் முன்பு திரண்ட வண்ணமிருந்தனர். நேரம் செல்லச்செல்ல குறிஞ்சி இல்லம் அமைந்துள்ள சாலையில் ஆயிரக் கணக்கான கழகத்தினர், மக்கள் திரண்டதால் சாலையெங்கும் தலைகளாகவே காட்சியளித்தன.

இதனையடுத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, அமைச்சர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், கழக முன்னணி தோழர்கள் உள்பட முக்கியப் பிரமுகர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் நீண்ட வரிசையில் நின்று கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

### மகளிர் சுய உதவிக்குழுவினர் தயாரித்த பொருட்கள் பரிசு!

ஏற்கனவே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தன்னைச் சந்திக்க வருபவர்கள் பூங்கொத்து, பொன்னாடைகளைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்து இருந்ததோடு மட்டுமின்றி மகளிர் சுய உதவிக்குழுவினர் தயாரிக்கும் பொருட்களைப் பரிசுகளாக வழங்கிடுமாறு அன்புக்கட்டளை விடுத்திருந்தார்.

அதன்படி நேற்று முன்தினம் குறிஞ்சி இல்லத்துக்கு வெளியே மகளிர் சுய உதவிக்குழுவினரின் கைவண்ணத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் விற்பனைக்கு மகளிர் சுய உதவிக்குழு திட்டத்தின் சார்பில் வைக்கப்பட்டு இருந்தது.

அப்பொருட்களை கழகத்தினர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அன்புடன் பரிசாக வழங்கி வாழ்த்தி வாழ்த்து பெற்றனர்.

### பரிசுப்பொருட்களை முதியோர் இல்லம் - மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார்!

தன்னைச் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கும்போது வழங்கிய அப்பொருட்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் மாலையே தனது சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள முதியோர் இல்லங்களிலும், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு இல்லங்களிலும் வழங்கி அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றார்.

### தொலைபேசி - நேரில் வாழ்த்தினர்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தொலைபேசி மூலமும், நேரில் சந்தித்தும் வாழ்த்தியோர் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., திருநாவுக்கரசர் எம்.பி., பீட்டர் அல்போன்ஸ், துரை வைகோ, அப்துல் சமது, செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ.,

திரையுலகைச் சேர்ந்த சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமலஹாசன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், நடிகர்கள் சத்யராஜ், சிவ கார்த்திகேயன், சந்தானம், சூரி, நடிகை கீர்த்தி சுரேஷ், இயக்குநர்கள் மாரிசெல்வராஜ், அருண்ராஜா காமராஜ், தயாரிப்பாளர் சங்கத் தலைவர் முரளி ராமசாமி உள்பட அமைச்சர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இன்னாள் உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், தோழர்கள், திரையுலகப் பிரமுகர்கள் என்று பல்லாயிரக்கணக்கானோர் நேரிலும், தொலைபேசியிலும் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

### எக்ஸ் பதிவு!

தனது பிறந்தநாளையொட்டி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதளப் பதிவில் : -

**“எனது பிறந்த நாளை முன்னிட்டு ஈன்றெடுத்த பெற்றோர் தி.மு.க. தலைவர் முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலினின் அவர்களிடமும், அன்னையாரிடமும் இன்று காலை வாழ்த்துக்களைப் பெற்றேன். அயராது உழைக்கவும், அன்பின் வழி நடக்கவும் எந்நாளும் வழி நடத்தும் தாய் - தந்தையரின் வாழ்த்தை பெற்ற மகிழ்வான தருணத்தில் இருந்து இந்த நாளை தொடங்குவதில் மகிழ்ச்சிக்கொள்கிறேன்”**

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு: 234 தொகுதிகளிலும்

# இருசக்கர வாகன பிரச்சாரம் முடித்து திரும்பி இருக்கிறீர்கள் - வாழ்த்துகள்!

## சேலத்தில் வரவேற்று அமைச்சர் கே.என்.நேரு பாராட்டு!

*சேலம், நவ. 29 -*

*சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி கழக இளைஞரணி 2 வது மாநில மாநாடு நடைபெறுவது ஒட்டி கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த மாதம் கன்னியாகுமரியில் இருசக்கர வாகன பேரணி தொடங்கி வைத்தார். இந்த இருசக்கர வாகன பேரணி தமிழ்நாடு முழுவதும் சுற்றி பெத்த நாயக்கன் பாளையத்தில் மாநாடு நடைபெறும் திடலை வந்தடைந்தது.*

*இதையடுத்து கழக முதன்மைச் செயலாளரும், மாநாடு ஒருங்கிணைப்பாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு இருசக்கர வாகன பேரணி பங்கேற்ற இளைஞரணி நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார். இதனை தொடர்ந்து. அமைச்சர் கே.என்.நேரு உரையாற்றினார். அப்போது;*

*தமிழக முதல்வர், தளபதி திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார். நம் மீது ஆயிரம் குற்றச்சாட்டுகள் சொன்னாலும் அதனை தூக்கி எறிந்து சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார்.*

*தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலிலும் 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும். அதற்கு தி.மு.க. இளைஞரணி மாநாடு வெற்றி மாநாடாக இருக்க வேண்டும்.*

*தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளிலும் இருசக்கர வாகன பிரச்சாரம் செய்து முடித்து சேலம் திரும்பி இருக்கிறீர்கள். உங்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இளைஞர் அணியினர் தொடர்ந்து உழைக்க வேண்டும். உங்களுக்கு வருங்காலத்தில் நிறைய வாய்ப்புகள் காத்திருக்கிறது. இளைஞர் அணியினர் தொடர்ந்து அயராது உழைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*

*இப்படி உழைத்த பலர் முன்னுக்கு வந்திருக்கிறார்கள் .உங்களுக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது.*

*தொடர்ந்து இந்த ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் உழைக்க வேண்டும்.*

*இவ்வாறு பேசினார்.*

*பின்னர் அமைச்சர் கே.என். நேரு மற்றும் திமுக நிர்வாகிகள் பைக் பேரணியுடன் சேர்ந்து சுமார் 5 கிலோமீட்டர் தூரம் வாகனம் ஓட்டினர்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், ராஜேந்திரன் எம்.எல்.ஏ., டி.எம்.செல்வகணபதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாநில உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றத் தலைவர் ராஜா, மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் சீனிவாசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் வரத.ராஜசேகர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் தனசேகரன், மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் ராஜவேல், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் திருநாவுக்கரசு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அருண், முன்னாள் எம்எல்ஏ தமிழ்செல்வன், புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், விஜயகுமார், ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், ராஜேந்திரன், மூர்த்தி, மருதமுத்து, சிவராமன், டாக்டர் செழியன், மணி, சித்தார்த்தன், அழகுவேல், பாலமுருகன், நகரச் செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியன் , முத்துலிங்கம், வழக்கறிஞர் மனோகரன், சங்கர், கோபால், சோமசுந்தரம், பேரூராட்சித் தலைவர் அன்பழகன் மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டனர்.*



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் டிசம்பர் 17 ஆம் தேதி கழக இளைஞரணி 2-வது மாநில மாநாடு நடைபெறுவதையொட்டி இருசக்கர வாகனப் பேரணி தமிழ்நாடு முழுவதும் சுற்றி பெத்தநாயக்கன் பாளையத்தில் மாநாடு நடைபெறும் திடலை வந்தடைந்தது. இதையடுத்து கழக முதன்மைச் செயலாளரும், மாநாடு ஒருங்கிணைப்பாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு இருசக்கர வாகனப் பேரணியில் பங்கேற்ற இளைஞரணி நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், ராஜேந்திரன் எம்.எல்.ஏ., டி.எம்.செல்வகணபதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாநில உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றத் தலைவர் ராஜா, முரா.கருணாநிதி, ஏ.ஏ.ஆறுமுகம், முனைவர் சீனிவாசன், ப்ரண்ட்ஸ் ரமேஷ், சேகர், வரத.ராஜசேகர், தனசேகரன், ராஜவேல், திருநாவுக்கரசு, அருண், தமிழ்ச்செல்வன், புஷ்பராஜ், வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், விஜயகுமார், ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், ராஜேந்திரன், மூர்த்தி, மருதமுத்து, சிவராமன், டாக்டர் செழியன், மணி, சித்தார்த்தன், அழகுவேல், பாலமுருகன் மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (6)

# இளமை முழக்கிய பொதுமை முரசம்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

இன்றைக்குப் பாடுபடும் பாட்டாளி வர்க்கம் - ஏழையர் சமுதாயம் - நடுத்தர மக்கள் கூட்டம் - எந்தக் கொள்கையின் வெற்றிக்காக, கொடியேந்தி நெடிய பயணம் நடத்துகிறதோ, அதற்கான விடியலை வழங்கிட விரிவான தத்துவக் கருவூலம் எழுதித் தந்தாரே! அந்தக் காரல் மார்க்ஸ், பதினேழாவது வயதில் பள்ளிக் கல்வி முடித்து, இருபத்தி நான்காவது வயதில் பத்திரிகை ஆசிரியராகி பல எதிர்ப்புகளை தாங்கி கொள்கை முழக்கிய இளைஞர்தான்.

அந்த இளமைக் காலத்திலே தான் "வேலையைத் தேர்ந்தெடுப்பது குறித்த ஓர் இளைஞனின் மனப்பதிவுகள்" என்ற ஆய்வுக் கட்டுரையில், அற்புதமான, ஆழமான, இயற்கையான தனது சிந்தனையின் வெளிப்பாடாகப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

**"நாம் எந்தத் தொழிலை விரும்புகிறோமோ, எந்தத் தொழிலில் தகுதியை வளர்த்துக் கொள்கிறோமோ அந்தத் தொழிலை அடைய முடியாமலேயே போய் விடலாம். ஏனெனில், சமுதாயத்தோடு நமக்குள்ள உறவு ஏற்கனவே தீர்மானிக் கப்பட்டதாகவே உள்ளது... மனித குலத்தின் நன்மைக்காகப் பணியாற்றுவதன் மூலம் தம்மை உயர்தகுதி உடையவர்களாக்கிக் கொண்ட மனிதர்களைத்தான் வரலாறு மகத்தான மனிதர்கள் என அழைக்கிறது. மக்களின் மகிழ்ச்சிக்காகப் பாடுபடும் மனிதனே மிகவும் மகிழ்ச்சியான மனிதன்"**

மொத்த மனிதகுலத்தின் விடுதலையோடு தொடர்புடையதே யூதர்களின் விடுதலையும் என மார்க்ஸ் முழங்கினார். முதலாளித்துவ சமூக அமைப்பு என்ற எல்லைக்குள் அரசியல் விடுதலை மிகப்பெரிய முன்னேற்றம்தான். ஆனால், மனிதகுல விடுதலை அதற்கும் மேலானது என்று வாதிட்டார் மார்க்ஸ். மனிதர்கள், தங்களது சொந்த சக்தியை ஒரு சமூக சக்தியாக அறிந்து கொண்டு, அமைப்புரீதியாகத் திரண்டால்தான் விடுதலை என்பது சாத்தியம் என்றார் அவர். மார்க்ஸின் இரண்டாவது கட்டுரை "சட்டம் பற்றிய ஹெகலின் தத்துவம் குறித்த விமர்சனம். இந்தக் கட்டுரையில் முதலாளித் துவத்தைத் தூக்கி எறியும் புரட்சிகர வர்க்கம் பாட்டாளி வர்க்கமே என்று அடையாளம் காட்டிய மார்க்ஸ், அந்த பாட்டாளி வர்க்கத்திற்கு தத்துவம் என்ற ஆயுதம் தேவை என்றார்.

**"தத்துவம் தனது பொருளாயத ஆயுதத்தை பாட்டாளி வர்க்கத்திடம் பெறுகிறது. அதுபோலவே பாட்டாளி வர்க்கம் தத்துவத்திடமிருந்து தனது ஆன்மிக ஆயுதத்தைப் பெறுகிறது... வெறும் விமர்சனங்களால் பொருளாயத சக்திகள் வீழ்த்தப்படுவதில்லை. பொருளாயத சக்திகள் பொருளாயத சக்திகளால்தான் வீழ்த்தப்பட வேண்டும். ஒரு கருத்து மக்களைச் சென்றடைந்து அது அவர்களின் மனதில் பதிந்துவிடுமானால், அதுவே பொருளாயத சக்தியாக மாறிவிடுகிறது"** என்ற புகழ்பெற்ற மார்க்சிய நிலையை, இந்த கட்டுரையில்தான் மார்க்ஸ் வரைந்தார்.

கார்ல் மார்க்ஸ், தமது இருபத்தி ஒன்பதாவது வயதில், ஏங்கல்ஸ் எழுதிய "கம்யூனிசத்தின் கோட்பாடுகள்" என்ற அறிக்கையின் அடிப்படையில், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை எழுதி இறுதிப்படுத்தும் பணியை மேற்கொண்டார். தமது முப்பதாவது வயதில், அதாவது 1848, பிப்ரவரியில் "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை" வெளியிட்டார். இதுதான் இன்றுவரை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு முதலாவது வேலைத்திட்ட அறிக்கையாகும். இதன் அடிப்படைகள் மீதுதான் உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்ட்டுகள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். "கட்சி அறிக்கை" என உலகெங்கிலும் அழைக்கப்படும் இந்த அறிக்கை, மார்க்சியத்தின் அடிப்படைகளை விளக்குகிறது. முதலாளித்துவத் தின் தோற்றுவாயையும், வளர்ச்சியையும், அதன் எதிர்காலப் போக்கையும் துல்லியமான அறிவியல் தன்மையோடு விளக்குகிறது. இந்த அறிக்கை மூலதனத்திற்கு எதிரான கம்யூனிசத்தின் கம்பீரமான பிரகடனமாகும். **"பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர, இழப்பதற்கு ஏதுமில்லாதவர்கள்; அவர்கள் வெற்றி பெறுவதற்கென்று அனைத்துலகும் இருக்கிறது. உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!"** என்ற காவிய மணம் தோய்ந்த போர்ப் பிரகடனத்துடன் கட்சி அறிக்கை நிறைவு பெறுகிறது.

மார்க்சியத்தை உருவாக்குவதற்கு அந்தப் பேரறிவாளனோடு இணைந்து நின்று உதவிய மற்றொரு சிந்தனையாளர் பிரெடரிக் ஏங்கல்ஸ். உண்மையில் அந்தச் சிந்தனையாளர் இல்லாவிட்டால் மார்க்சியம் என்று ஒன்று, இன்று உருவாகியிருக்குமா என்பது சந்தேகம்தான். மார்க்ஸோடு இணைந்து மார்க்சியத்தின் பல கூறுகளை உருவாக்கிய பெருமை ஏங்கல்சுக்கு உண்டு. மார்க்சியம் என்று அழைக்கப்படுவது கார்ல் மார்க்சின் பெயரில் இருந்தாலும், உண்மையில் அது ஏங்கல்ஸ், மார்க்ஸ் ஆகிய இருவரது கூட்டு உழைப்பு, ஆய்வு, சிந்தனை ஆகியவற்றின் விளைவு ஆகும். உலக வரலாற்றிலேயே இருவர் இணைந்து ஓர் உலகப் பொதுவான தத்துவத்தை உருவாக்கியுள்ளனர் என்றால் அது மார்க்சியம்தான்.

ஏங்கல்ஸ், தமது பத்தொன்பதாவது வயதிலேயே, அதாவது 1839ஆம் ஆண்டு "உப்பர்டால் கடிதங்கள்" என்ற தலைப்பில் பல கடிதங்களை எழுதினார். அவை மதத்தையும், அரசனையும் எதிர்த்து எழுதப்பட்டவை ஆகும். அதனால், பல இடங்களில் பரபரப்பை ஏற்படுத்தின. அவரது இருபத்தி இரண்டாவது வயதில், ஏங்கல்சிற்கு "ரெயின்லாந்து கெஜட்" என்ற பத்திரிகையின் தொடர்பு கிடைத்தது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக கார்ல் மார்க்ஸ் பொறுப்பேற்றிருந்தார். அப்போது ஏங்கல்சிற்கு மார்க்சைத் தெரியும். ஆனால் சந்தித்தது இல்லை. மார்க்ஸ் புரட்சிகர மான கருத்துகளை இந்தப் பத்திரிகை மூலம் பரப்பினார். பொதுவுடைமைக் கருத்துகளைப் பற்றி அதிகம் எழுதினார். ஏங்கல்ஸ் இக்கருத்துகளை ஏற்றுக் கொண்டார். அவர் தமது இருபத்தி நான்காவது வயதில், 1844ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ஜெர்மனி செல்லும் வழியில் பாரீசில் தங்க நேரிட்டது. இந்த ஆண்டில்தான் ஏங்கல்ஸ் மார்க்சை சந்தித்தார்.

இது ஒரு முக்கியமான சந்திப்பாகும். அதுமட்டுமல்லாமல், உலகத்தையே மாற்றிய ஒரு தத்துவத்தை உருவாக்குவதற்கு இந்தச் சந்திப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்தச் சந்திப்பைப் பற்றியும், மார்க்சிய சிந்தனைகளைப் பற்றியும் திரு. வெ.சாமிநாத சர்மா அவர்கள், அவருடைய, "கார்ல்மார்க்ஸ்" என்ற நூலில், **"உலகில் எத்தனையோ சந்திப்பு கள் ஏற்படுகின்றன. எத்தனையோ சிநேக ஒப்பந்தங்கள் அழியாத மையினால் எழுதப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுகின்றவர்களும், பெரிய மனிதர்களாயிருந் திருக்கிறார்கள். ஆனால் மார்க்ஸ், ஏங்கல்ஸ் சந்திப்பு, நட்பு, ஒப்பந்தம், உலக சரித்திரத்தை மாற்றியமைத்ததைப் போல வேறு யாருடைய சந்திப்பும், நட்பும், ஒப்பந்தமும் மாற்றியமைக்கவில்லை. இருவருடைய சுபாவங் களும், அனுபவங்களும் வேறுவேறா யிருந்த போதிலும் ஒன்றுக்கொன்று துணை செய்வனவாயிருந்தன. எப்படி குடும்பமெனும் கப்பலை இயக்கிக் கொண்டு போவதற்கு மனமொத்த தம்பதிகள் அவசியமாயிருக்கிறதோ, அப்படியே சமதர்மமெனும் கப்பலை, கொந்தளிப்பான சமுத்திரத்தில் மிதக்க விடுவதற்கு ஒரே பார்வையுடைய இரண்டு பேர் அவசியமாயிருந்தது"** என்று வர்ணனை செய்துள்ளார்.

பிரெடரிக் ஏங்கல்ஸ், தமது இருபத்தி ஐந்தாவது வயதில், 1845ஆம் ஆண்டு மார்க்சுடன் சேர்ந்து இருவரும் கூட்டு முயற்சி ஒன்றை மேற்கொண்டனர். அதாவது, ஹெகலுக்குப் பிந்திய கால ஜெர்மானியத் தத்துவத்தைப் பற்றியது அந்த நூல். அந்த நூலின் பெயர் "ஜெர்மானியக் கருத்தியல்". இந்த நூல் மார்க்சிய இலக்கியத்தில் மிக முக்கியமானதாகும். இந்த நூலில் வரலாற்று இயல் பொருள் முதல்வாதம் என்பது பற்றி விளக்கம் இடம்பெறுவதைக் காணலாம். வரலாறு என்பது பொருளியல் தன்மை உடையது என்பதை மார்க்சும், ஏங்கல்சும் விளக்குகின்றனர். அதாவது உற்பத்தி (மனிதனுக்கும், இயற்கைக்கும் உள்ள உறவு) பரஸ்பர உறவு (ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் உள்ள உறவு) என்பவைதான் மனிதனது செயலுக்குரிய இரு பகுதிகள் என்பதை விளக்குகின்றனர். இந்தப் பொருள் உற்பத்தியானதுதான் மனிதனது வாழ்வைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. அதாவது, உற்பத்தி முறையானது வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கிறது. இந்த உற்பத்தி முறை சமூக உறவுகளையும், அரசியல் உறவுகளையும் தீர்மானிக்கிறது.

"கம்யூனிஸ்ட் அறிக்கை" வெளியான பின்னர், மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரது வாழ்க்கை முழுவதும் புரட்சிகர இயக்கங்களில் பங்கெடுக்கும் போக்கில் மாறியது. அவரது இருபத்தி எட்டாவது வயதில் ஏங்கல்ஸ் ஜெர்மனிக்குச் சென்றார். அங்கு புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அங்கு நிலவிய சீர்திருத்தவாதப் போக்கினை எதிர்த்துப் போராடினார். 1849ஆம் ஆண்டு, அதாவது தமது இருபத்தொன்பதாவது வயதில், ஏங்கல்ஸ் "ஜெர்மனியில் விவசாயிகள் போராட்டம்" என்ற நூலை எழுதினார். மார்க்சிய கொள்கை வளர்ச்சியில் இது மிக முக்கியமான ஒரு நூல். வரலாற்றியல் பொருள்முதல் வாதத்தினைப் பயன்படுத்தி வர்க்கப் போராட்டம் பற்றிய விளக்கத்தை ஏங்கல்ஸ் இதில் அளிக்கிறார். மதம் பற்றியும், மதத்தின் பங்கு பற்றியும் இதில் ஒரு விரிவான விவாதம் இடம் பெறுகிறது.

**அன்புள்ள**

**மு.க.**

(முரசொலி - 13.11.2007)

# வி.பி.சிங் ஏற்றிவைத்த சமூக நீதி தீபம் அணையாது!

## முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அமல்படுத்தியபோது, சில ஆதிக்க சக்திகள் அதை எதிர்த்தார்கள். வன்முறை போராட்டங்களையும் நடத்தினார்கள். அந்த நேரத்தில், அதேநேரத்தில், **தலைவர் கலைஞர் தலைமையில் இதே கலைவாணர் அரங்கத்தில் ஒரு கவியரங்கம் நடந்தது. மிகுந்த கோபத்துடன் அன்றைய நாள் கவிதை கர்ஜனை செய்தார் தலைவர் கலைஞர் அவர்கள்... அந்தக் கவிதையின் சில வரிகளை மட்டும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்...**

**"மண்டல் குழு பரிந்துரையை மைய அரசு ஏற்றமைக்கு மகத்தான வெற்றி விழா! மனிதாபிமானி வி.பி.சிங்கிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் திருவிழா!"** என்று தொடங்கி, சமூகநீதிக்கான குரலாக தலைவர் கலைஞருடைய கவிதை வரிகள் அனல் தெறித்தது!

**"ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில் அவன் உயர்சாதிக்கு மட்டும் தங்கத்தால் மூளை செய்து தலைக்குள்ளே வைத்தானா? மற்ற சாதிக்கெல்லாம் மண்டைக்குள் இருப்பதென்ன? களிமண்ணா? சுண்ணாம்பா? கட்டை விரலோ, தலையோ காணிக்கையாக இந்நாளில் எவரும் கேட்டால் பட்டை உரியும், சுடுகாட்டில் அவர் கட்டை வேகும்"** என்று தலைவர் கலைஞருடைய பேச்சில், உணர்ச்சிக் கொந்தளித்தது! இப்போதுகூட இந்த கலைவாணர் அரங்கத்தில் அந்தக் கவிதை வரிகளின் வெப்பத்தை என்னால் உணர முடிகிறது!

வி.பி.சிங் அவர்கள் பிறந்த உத்தரப் பிரதேச மாநிலத்தின் Former Chief Minister - Present Leader of Opposition - My dear brother Future Chief Minister அகிலேஷ் அவர்கள், இங்கு வருகை தந்துள்ளார். வி.பி.சிங் அவர்களுக்கு பிடித்த தலைவரான, ராம் மனோகர் லோகியா அவர்களால் உருவாக்கப்பட்ட முலாயம் சிங் அவர்களின் மகனான அகிலேஷ் அவர்கள், வி.பி.சிங் அவர்களுடைய சிலை திறப்பு விழாவுக்கு வந்திருக்கிறார்.

வி.பி. சிங் அவர்களுக்கு தாய் வீடு, உத்தரப்பிரதேசம் என்றால், தமிழ்நாடு தான், தந்தை வீடு! தந்தை பெரியார் பெயரை உச்சரிக்காமல் அவருடைய பேச்சு இருக்காது. அதுனால்தான் அப்படிப்பட்ட தந்தை பெரியாருடைய சமூகநீதி மண்ணில் வி.பி.சிங் அவர்களுக்கு முதன்முதலாக சிலை அமைக்கப் பட்டுள்ளது. நானும், மரியாதைக்குரிய வி.பி.சிங் அவர்களும் ரெண்டு முறை சந்தித்து இருக்கிறோம்.

### வி.பி.சிங்குக்கு சிலை வைத்ததின் மூலம் தமிழ்நாடு அரசு பெருமையடைகிறது!

முதல் சந்திப்பு, 1988ஆம் ஆண்டு தேசிய முன்னணியின் தொடக்கவிழா சென்னையில் நடந்தது! அப்போது இளைஞர் அணி சார்பில், மாபெரும் ஊர்வலத்தை நான் தான் தலைமை தாங்கி நடத்தி வந்தேன். கிட்டதட்ட இரண்டு லட்சம் இளைஞர்கள் பங்கெடுத்த அந்த ஊர்வலத்தை, இதே அண்ணாசாலையில், காயிதே மில்லத் கல்லூரி, அன்றைக்கு Arts College என்று பெயர். அந்த கல்லூரிக்கு அருகில் மேடை அமைத்து மாலை தொடங்கி இரவு வரை மேடையில் இருந்தபடி, வியந்தபடி பார்த்து வாழ்த்தினார் வி.பி.சிங் அவர்கள். அப்போது நான் அவரிடம் பேச வாய்ப்பு கிடைக்கவில்லை.

அடுத்த சந்திப்பு, அவர் பிரதமராக ஆனபோது, டெல்லிக்கு சென்று எம்.எல்.ஏ குழுவில் நான் இருந்தேன். சட்டமன்றத்தில் எல்லாக் கட்சி எம்.எல்.ஏக்களும் பல குழுக்கள் அமைத்தார்கள். அதில் ஒரு குழுவில் நான் இடம் பெற்றிருந்தேன். அப்போது டெல்லிக்குச் சென்றபோது, ஒவ்வொருவராக அவருக்கு அறிமுகம் செய்தார்கள். அப்போது என்னிடம் வந்தபோது, என்னை அறிமுகம் செய்து வைத்தபோது, அவர் சிரித்துக்கொண்டே சொன்னார். "இவரை எப்படி மறக்க முடியும். இவர் தான் சென்னையில் இளைஞர் படையை அணிவகுத்து நடத்தினார்!" என்று மறக்காமல் பாராட்டினார் பிரதமர் வி.பி.சிங்.

### என் வாழ்நாளில் மறக்க முடியாத பாராட்டு!

அந்த பாராட்டு என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு! இன்றைக்கு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவருக்கு சிலை திறந்திருக்கிறேன் என்றால், இதைவிட என்ன பெருமை எனக்கு வேண்டும்? எங்களுடைய அழைப்பை ஏற்று, இங்கு வருகை தந்துள்ள வி.பி.சிங் அவர்களின் மனைவி சீதா குமாரி அவர்களுக்கும், அவருடைய மகன் அஜயா சிங் அவர்களுக்கும் உங்களுடைய அனைவரின் சார்பில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.பி.சிங் குடும்பத்தினர் என்று உங்களை நான் அழைக்க விரும்பவில்லை. நீங்கள் வி.பி.சிங் குடும்பத்தினர் என்றால் நாங்கள் யார்? நாங்களும் வி.பி.சிங் குடும்பத்தினர்தான்!

இந்தியா முழுமைக்கும் பரவி இருக்கின்ற சமூகநீதிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்! வி.பி.சிங் அவர்களுக்கு சிலை வைப்பது மூலமாக அவருடைய புகழ் உயருகிறது என்று பொருள் இல்லை; நாம் அவருக்கு காட்ட வேண்டிய நன்றியை காட்டி இருக்கிறோம்!

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதிக் கதவை திறந்து வைத்தவர் வி.பி.சிங் அவர்கள். தன்னுடைய பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று அதில் உறுதியாக இருந்தவர் வி.பி.சிங். அவருக்கு சிலை அமைப்பதை இந்த திராவிட மாடல் அரசு தன்னுடைய கடமையாக கருதுகிறது.

சமூகநீதியை காக்கின்ற கடமையில் இருந்து இம்மியளவும் வழுவாமல் இந்த திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

### ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது வி.பி.சிங் வரலாறு!

வி.பி.சிங் அவர்களைப் பற்றியும், அவரது தியாக வாழ்க்கைப் பற்றியும் இந்திய மண்ணில் உள்ள ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, இளைஞர்களுக்கு அவருடைய வாழ்வு திரும்ப திரும்ப சொல்லப்படவேண்டும். அதனால்தான் மாநில கல்லூரியில் அவருடைய சிலையை அமைத்திருக்கிறோம்.

வி.பி.சிங் அவர்கள் உத்தரப்பிரதேச மாநிலத்தில் மிகப்பெரிய ஜமீன்தாருக்கு மகனாக பிறந்து, ஆடம்பர வாழ்க்கை வாய்த்தாலும், அதில் மனது ஒட்டாமல் கல்லூரி படிக்கின்ற காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டார். சர்வோதய சமாஜில் இணைந்தார். பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தார். வினோபா அவர்களிடம் தன்னுடைய நிலங்களையே தானமாக வழங்கினார்.


1969ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர். இந்திய ஒன்றியத்தில் வர்த்தக அமைச்சர், நிதி அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய உயர் பதவிகளை வகித்தார். தேசிய முன்னணியை உருவாக்கி 1989ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகவே ஆனார்.

வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தது பதினோரு மாதம்தான் என்றாலும், அவர் செய்த சாதனை என்பது மகத்தானவை! இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டப்போது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய மக்கள்தொகைக்கு ஏற்ப, இடஒதுக்கீடுதரப்படவில்லை. அதை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் பி.பி.மண்டல் தலைமையிலான ஆணையம்!

### மண்டல் பரிந்துரையை அமல்படுத்திய வி.பி.சிங்!

சமூகரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படுகின்ற சமூகத்துக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பி.பி.மண்டல் பரிந்துரையின் உத்தரவை அமல்படுத்திய சமூகநீதிக் காவலர் தான் வி.பி.சிங் அவர்கள்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



# தந்தை பெரியாரை தலைவராக ஏற்றவர் வி.பி.சிங்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி!

வி.பி.சிங் அவர்கள் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல! ஏன், ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்ல! ஆனாலும் ஏழை - எளிய, பிற்படுத்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இடஒதுக்கீட்டைச் சாத்தியப்படுத்திக் காட்டியவர்! அப்போது நாடாளுமன்றத்தில் தந்தை பெரியார் - புரட்சியாளர் அம்பேத்கர் - ராம் மனோகர் லோகியா ஆகிய மூவருடைய பெயரைத்தான் வி.பி.சிங் அவர்கள் குறிப்பிட்டார். தந்தை பெரியாருக்குத் தனிப்பட்ட நன்றியை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தார். பதவியில் இருந்த பதினோரு மாத காலத்தில்,

•பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு

•தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு தொடக்கப்புள்ளி

•தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு தொடக்கப் புள்ளி

•வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை உருவாக்கியது

•லோக்பால் சட்டத்துக்கு தொடக்க முயற்சிகள்

•தேர்தல் சீர்திருத்தங்கள்

•அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு பாரத ரத்னா விருது

•நாடாளுமன்றத்தின் நடுவே அண்ணல் அம்பேத்கர் படம்

•மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில்

•உழவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூன்று குழுக்கள்

•டெல்லி குடிசைப்பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள்

•அதிகபட்ச சில்லறை விற்பனை விலை (MRP) அச்சிட உத்திரவு

•நுகர்வோர் பாதுகாப்பு

இன்னும் பட்டியல் நிறைய இருக்கிறது!

**சமூகநீதிக் காவலர்**
**பாராட்டும் சாதனையாளர்!**

இப்படி பல சாதனைகளை செய்து காட்டிய மாபெரும் சாதனையாளர்தான் நம்முடைய வி.பி.சிங் அவர்கள். மதிப்பிற்குரிய சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் முயற்சியால்தான் இன்றைக்குப் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒரு அடியாவது முன்னேறியி ருக்கிறார்கள். நாம் இன்னும் பல உயரங்களுக்குச் செல்லவேண்டும்.

நமக்கான உரிமைகள் இன்றைக்கும்கூட முழுமையாக கிடைக்காத - கிடைக்க முடியாத சூழல்தானே நிலவுகிறது! குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், கல்வி நிறுவனங்களில் ஒபிசி இடஒதுக்கீடு 2006க்கு பிறகுதான் நடைமுறைக்கு வந்தது.

பல்கலைக்கழக மானியக்குழு இணை இயக்குநர் பதவிக்கு இடஒதுக்கீடே கிடையாது. எல்லாமே பொதுப்பிரிவு! ஒன்றிய அரசின் துறைச் செயலாளர்கள் 89 பேரில் 85 பேர் உயர்சாதியினர். பட்டியலினப் பிரிவைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர், பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 3 பேர் மட்டும்தான்! பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட கிடையாது!

ஒன்றிய அரசு துறைகளின் கூடுதல் செயலாளர்கள் 93 பேரில், 82 பேர் உயர்சாதியினர். பிற்படுத்தப்பட்டவர் கிடையாது! ஒன்றிய அரசு துறைகளின் இணைச் செயலாளர்கள் 275 பெயரில், 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள்! அசாம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருக்கின்ற மத்திய சட்டப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டு வரை இடஒதுக்கீடே இல்லாத நிலைதான் நீடிக்கிறது.

**இடஒதுக்கீட்டை அமல்படுத்த**
**தொடர்ந்து உழைப்போம்!**

45 மத்தியப் பல்கலைக்கழகங்களில், பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் 4 விழுக்காடு மட்டும்தான்! இப்படித்தான் பல்வேறு துறைகளில் இன்றைக்கும் நிலைமை இருக்கிறது.

சரி, நீதிமன்றங்களில் சமூகநீதியின் நிலை என்ன? 2018 முதல் 2023 வரை நாடு முழுவதும் உயர்நீதிமன்றங்களில் நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில், 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆனால், 458 பேர் பொதுப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை. ஏன், அரசுத் துறைகளின் பதவி உயர்வுகளின் போது இடஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தபடவில்லை. இந்த நிலையை எல்லாம் மாற்றுவதற்குதான் நாம் தொடர்ந்து உழைக்கவேண்டும். அதுதான் வி.பி.சிங் போன்றோருக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான புகழ் வணக்கம்!

அந்தப் பணியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போதும் சோர்ந்து போகாது. அதற்கு எடுத்துக்காட்டுதான், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் அன்றிலிருந்து இன்றைக்கு வரை நாம் முன்னெடுக்கின்ற சட்ட முயற்சிகள்!

இந்தியா முழுவதும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் இல்லாமல் இருந்த ஓபிசி இடஒதுக்கீட்டை 29.7.2021 அன்று உச்சநீதிமன்றம் மூலமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்தியாவிற்கே பெற்றுத் தந்தது! அது மட்டுமா! தமிழ்நாட்டில் சமூகநீதியைக் கண்காணிக்க குழு அமைத்திருக்கிறோம்.

தந்தை பெரியார் பிறந்தநாளைச் சமூகநீதி நாளாகவும் - புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளைச் சமத்துவ நாளாகவும் கொண்டாடி வருகிறோம். சமூகநீதிக்குத் தடையாக அமைந்துள்ள நீட் தேர்வை அகற்றும் சட்டப்போராட்டத்திலும், அறப்போராட்டத்திலும் ஈடுபட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நம்முடைய தமிழ்நாட்டைதான் தன்னுடைய ரத்த சொந்தங்கள் வாழுகிற மாநிலமாக நினைத்தார் வி.பி.சிங் அவர்கள். தந்தை பெரியாரை தன்னுடைய உயிரினும் மேலான தலைவராக வி.பி.சிங் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

**“ஒரு மனிதனுக்குச் சாவைவிட மிகக் கொடுமையானது ‘அவமானம்’. அந்த அவமானத்தைத் துடைக்கின்ற மருந்துதான் பெரியாரின் “சுயமரியாதை” என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களைச் சொந்த சகோதரனைப் போல மதித்தார்.**

**“காலம் மாறினாலும் தான் மட்டும் மாறாமல் இருக்கிற ஒரு தலைவர் உண்டென்றால் அது கலைஞர் அவர்கள்தான். பதவியைக் காப்பாற்றிக் கொள்ள என்னுடைய கட்சி முதலமைச்சர்களே என்னை விட்டு ஓடிய நேரத்தில் என்னுடன் இருந்தவர் கலைஞர் அவர்கள்” என்று பாராட்டியவர் வி.பி.சிங் அவர்கள்.**

**தலைவர் கலைஞரிடம்**
**மதிப்பு வைத்தவர் வி.பி.சிங்!**

வி.பி.சிங் அவர்களுக்கும், கலைஞருக்கும் இருந்த நட்பு எப்படிப்பட்டது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன்.

சென்னை கடற்கரையை நோக்கி பிரதமர் வி.பி.சிங் அவர்களுடைய கார் செல்கிறது. முதலமைச்சர் கலைஞரும் கூட இருந்தார். வி.பி.சிங் அவர்கள், “உங்களுடைய வீட்டுக்குப் போக வேண்டும், காரை அங்கே போகச் சொல்லுங்கள்’ என்று சொல்கிறார். ஆனால் அவருடன் இருந்த பிரதமருடைய செயலாளர் அவர்கள், புரோட்டகால்படி கடற்கரை பொதுகூட்டம், ஆளுநர் மாளிகையில் தங்குவது, இது இரண்டை தவிர வேறு இடத்திற்கு செல்லக்கூடாது” என்று தடுத்திருக்கிறார். ஆனால், பிரதமர் வி.பி.சிங் அவர்கள், அதை கோபமாக மறுத்து, “நிச்சயமாக முதலமைச்சர் இல்லத்திற்கு சென்றுதான் ஆகவேண்டும்” என்று சொல்லி, கோபாலபுரம் இல்லத்திற்கு சென்றுவிட்டுதான் கடற்கரை பொதுக்கூட்டத்திற்குப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் சென்றார்.

தலைவர் கலைஞர் மேல் எத்தகைய மதிப்பையும், அன்பையும் பிரதமர் வி.பி.சிங் வெச்சிருந்தார் என்பதற்கு இது ஒரு பெரிய எடுத்துக்காட்டு!

அந்தக் கடற்கரை கூட்டத்தில்தான், சென்னையில் இருக்கின்ற இரண்டு விமான முனையத்துக்கு பேரறிஞர் அண்ணா பெயரையும், பெருந்தலைவர் காமராசர் பெயரையும் வைக்க வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கோரிக்கை வைத்தார். அப்போதெல்லாம் செல்ஃபோன் கிடையாது. அவருக்கென்று ஒரு பிரைவேட் ரூம் இருக்கும், அதில் லைட்டினிங் கால் இருந்தது, அதிலிருந்துதான் ஃபோன் பேச முடியும். பிரதமர் வி.பி.சிங் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து, டெல்லிக்கு Lightning call செய்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பேசி, இப்படி ஒரு கோரிக்கை இருக்கிறது, இதை நிறைவேற்றவேண்டும் என்று கலந்துபேசி அதை அந்த மேடையில் அறிவித்தார். அதே மேடையில் கலைஞர் அவர்கள் கேட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவேன் என்று அறிவித்தார். இன்றைக்கு அந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

**வி.பி.சிங் அமைத்துத் தந்த**
**காவிரி நடுவர் மன்றம்!**

**இங்கே அண்ணன் துரைமுருகன் அவர்கள் இருக்கிறார், காவிரி பிரச்சினை பற்றி அவருக்கு முழுமையாக தெரியும், முழுமையாக அறிந்தவர். அவர் அதில் பின்ணிப் பிணைந்தவர். தமிழ்நாட்டு மக்களுடைய உயிர் பிரச்சினையான காவிரி நீருக்காக பல ஆண்டுக்கு பிறகு, பல போராட்டத்திற்கு பிறகு, தலைவர் கலைஞருடைய கோரிக்கை ஏற்று, வி.பி.சிங் அவர்கள் ஆட்சியில் தான் காவிரி நடுவர் மன்றத்தை அமைத்துத் தந்தார்.**

அதேபோல், இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதமர் வி.பி.சிங் அவர்கள் எவ்வளவு அக்கறையோடு நடந்து கொண்டார் என்றால், தன்னுடைய வீட்டிலேயே அகில இந்தியத் தலைவர்களையும் - மாநில முதலமைச்சர்களையும் 1990ஆம் ஆண்டு கூட்டினார்.

9 மாநில முதலமைச்சர்கள் - 7 ஒன்றிய அமைச்சர்கள் - 5 அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். எல்லோரையும் வரவழைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞரைத்தான் பேசச் சொன்னார் பிரதமர் வி.பி.சிங். பேசச் சொன்னதற்கு பிறகு சொல்கிறார், ‘இப்போது கலைஞர் சொல்லப் போவதுதான் என்னுடைய கருத்து’ என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள்.

கலைஞர் அவர்கள் மீதும், தமிழினத்தின் மீதும் வி.பி.சிங் அவர்கள் எந்தளவுக்கு பாசம் வைத்திருந்தார் என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு தேவையில்லை!

இன்னொரு சம்பவத்தை சொல்கிறேன்.

“தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் டெல்லியில்தான் கூட்டணுமா? மாநிலங்களில் கூட்டலாமே?” என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கோரிக்கை வைத்தார். ‘அப்படியென்றால், தமிழ்நாட்டில் நடத்துவீர்களா?’ என்று பிரதமர் வி.பி.சிங் கேட்டார். உடனே, சரி என்று சொன்னார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

**அரசியல் நாட்காட்டியில்**
**கடைசி நாளே இல்லை என்றவர்!**

முதன்முதலாக தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் சென்னையில் நடந்தது என்பது வரலாறு! நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் அடிக்கடி பிரதமர் வி.பி.சிங் சொல்வது, “நீங்கள் கோரிக்கைகளை எடுத்துக்கொண்டு டெல்லிக்கு வரக்கூடாது, சென்னையில் இருந்து சொன்னால் போதும்” என்று சொன்னவர் பிரதமர் வி.பி.சிங் அவர்கள். எத்தகைய வசந்த காலங்களை நாம் பார்த்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும் போது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

அதேபோன்ற காலம் இனியும் வரவேண்டும். அது நாம் ஒன்றிணைந்து உழைத்தால் முடியும்! வி.பி.சிங் அவர்கள் உடல்நலிந்த நிலையில்கூட டெல்லி மக்களுடைய குடியிருப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்! ‘அரசியல் நாட்காட்டியில் கடைசி நாள் என்பதே இல்ல’ என்று கம்பீரமாக சொன்னவர். ஏற்றுக்கொண்ட கொள்கையில் இறுதிவரை உறுதியாக இருந்த வி.பி.சிங் அவர்கள், உடல்நலக்குறைவால் 2008ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாள் மறைந்தார்.

வி.பி.சிங் அவர்களுடைய மறைவு இந்தியாவுக்கே ஏற்பட்ட பெரும் இழப்பு! சமூகநீதியின் காவலரான வி.பி.சிங் அவர்களுக்கு சிலை வைத்ததன் மூலமாக தமிழ்நாடு அரசு இன்றைக்கு பெருமை அடைகிறது. சமூகநீதிப் பயணத்தில் நாம் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகம்!

சமூகநீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்சினை இல்லை; எல்லா மாநிலங்களின் பிரச்சினை! ஒவ்வொரு மாநிலத்துக்கும் சாதி வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். ஆனால் பிரச்சினை ஒன்றுதான்! அதுதான், புறக்கணிப்பு! எங்கெல்லாம் புறக்கணிப்பு - ஒதுக்குதல் - தீண்டாமை -அடிமைத்தனம் - அநீதி இருக்கிறதோ, அங்கெல்லாம் அதை முறிக்கின்ற மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி! அந்த சமூகநீதி தழைக்க வேண்டுமானால், நாம் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய பணிகளை சொல்லி, நிறைவு செய்ய விரும்புகிறேன்.

**சாதிவாரி கணக்கெடுப்பு**
**நடத்தப்பட்டாக வேண்டும்!**

தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை அந்தக் கணக்கெடுப்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்தவேண்டும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும். பட்டியலின பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்து கட்சி எம்.பிக்கள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும். இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்படவேண்டும்.

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் சிலை திறப்பு நாளில் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய உறுதிமொழி; “இந்தியா முழுமைக்கும் வாழும் பிற்படுத்தப்பட்ட - பட்டியலின பழங்குடியின - சிறுபான்மை விளிம்பு நிலை மக்களுடைய உயர்வுக்கான “அரசியல் செயல்திட்டங்கள்” “அரசின் செயல் திட்டங்களாக” மாற்றி அமைக்க இன்றைக்கு உறுதி ஏற்போம்! உறுதி ஏற்போம்!” என்று கூறி,

“வி.பி.சிங் அவர்கள் மறையலாம். அவர் ஏற்றி வைத்த சமூகநீதி தீபம் அணையாது. அவரை யார் மறந்தாலும், தமிழ்நாடு மறக்காது. திராவிட மாடல் அரசு மறக்காது! மறக்காது!” என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.


> **வி**.பி.சிங் குடும்பத்தினர் என்று உங்களை நான் அழைக்க விரும்பவில்லை. நீங்கள் வி.பி.சிங் குடும்பத்தினர் என்றால் நாங்கள் யார்? நாங்களும் வி.பி.சிங் குடும்பத்தினர்தான்!
>
> இந்தியா முழுமைக்கும் பரவி இருக்கின்ற சமூகநீதிக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் நாங்கள்! வி.பி.சிங் அவர்களுக்கு சிலை வைப்பது மூலமாக அவருடைய புகழ் உயருகிறது என்று பொருள் இல்லை; நாம் அவருக்கு காட்ட வேண்டிய நன்றியை காட்டி இருக்கிறோம்!

---

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் தலைமை!

## மாவட்டப் பிரதிநிதி கேவிஎஸ்.ஏ.மோகன் - பச்சையம்மாள் இல்ல திருமண விழா!

### பெரியண்ணன் அரசு, எம்.எம்.அப்துல்லா, வை.முத்துராஜா, கேபிகேடி.தங்கமணி, ரெ.தங்கம் பங்கேற்பு!



புதுக்கோட்டை, நவ.29-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருவரங்குளம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அரசடிப்பட்டி, தவளப்பள்ளம் கிராமத்தில் மாவட்டப் பிரதிநிதி கேவிஎஸ்.ஏ.மோகன்-பச்சையம்மாள் ஆகியோர் மகன் எம்.மகேஷ்வரனுக்கும் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா, கொண்டிகுளம் ரா.ராஜேந்திரன் - செல்லம்மாள் என்ற மாலா ஆகியோர் மகள் ஆர்.ராதிகாவுக்கும், அரசடிப்பட்டி மணமகன் இல்லத்தில் திருமணம் இன்று (29.11.2023 புதன் கிழமை) காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்று சூழல், கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னாள் மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் அரசு, எம்.எம்.அப்துல்லா எம்.பி., டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் ஜோன்ஸ் ரூசோ, தொழிலதிபர்கள் எஸ். ராமச்சந்திரன்,எஸ்.ஏ. சையது இப்ராஹிம், சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் த.சந்திரசேகரன், மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், தமிழ்நாடு அரசு நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம், திருவரங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் அரு. வடிவேலு, மாவட்ட துணை செயலாளர் ஞான.இளங்கோவன், ஒன்றிய பெருந்தலைவர் கேபிகே.டி.வள்ளியம்மை தங்கமணி, நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், திருவரங்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.ரவி, மணமேல்குடி ஒன்றியச் செயலாளர் சக்தி.ராமசாமி, அறந்தாங்கி கிழக்கு ஒன்றிய செயலாளர் எல்.குமார், பேரூராட்சி மன்ற தலைவர் கே.சி.சிவக்குமார், ஆலங்குடி பேரூர் செயலாளர் ஏ.பழனி குமார்,ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.நாராயணன், பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், முகமை “இணைதாளம்” என்.ஜெயராமன், தமிழ்நாடு அரசு நல வாரிய உறுப்பினர் சகாய சங்கீதா, தலைமை ஆசிரியர் ஆரோக்கிய மேரி, அருட்சகோதரி ஏ.அடைக்கலமேரி ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி வரவேற்று பேசுகிறார்.

மேலும், நிர்வாகிகளான ஸ்ரீதேவி அண்ணாதுரை, க.சத்தியமூர்த்தி, கேபிகே. பனையப்பன், செ.அசோக் பாண்டியன், ராஜு ரஞ்சன் பிரதர்ஸ், ஆர்.ரெத்தினவேல், த.மணிராஜன், தமிழ்ச்செல்வி முருகேசன், க.நைனா முகமது,சிவ.பால.இளங்கோ, எம்ஜி என்ற ராமச்சந்திரன், மு.கருணாகரன், பொன். லோகநாதன், சர்வேயர் எம். நடேசன், வழக்கறிஞர் டி. வளர்மதி, கே.பி.கே.டி.தேவ சூர்யா, ஆர்.வைத்திலிங்கம், எம்.எம்.பாலு, ஆசிரியர் எம். ரமேஷ், அரசு கூடுதல் வழக்கறிஞர் கன்ரா கணேஷ், அரசு கூடுதல் வழக்கறிஞர் த.பழனியப்பன், எஸ்எம்.குமரேசன், டாக்டர் ஆர்.கண்ணதாசன், அரசு கூடுதல் வழக்கறிஞர் த.கண்ணதாசன்,

டி.ஜான்பிரிட்டோ, உமா சண்முக சுந்தரம், க.செல்லத்துரை, சி.சிவசங்கர், கேஎம். சுப்பிரமணியன், பெரி.பன்னீர்செல்வம், சுமதிமெய்யநாதன், கேவி.சுப்பையா, எஸ்.செல்வம், க.தெட்சிணாமூர்த்தி, ஆர்.மகிமைநாதன், ஆர்.எம்.ஏ. அயூப்கான், உஷா செல்வம், ஏ.அருளானந்து, ஆர்.நாராயணசாமி, ஐ.லூர்துநாதன், நேஷனல் என்.அப்துல்லா, ஏஎஸ்ஆர்.இப்றாஹிம், எஸ்பி.முத்துராமன், கே.வீரப்பன், வீர.மெய்யர், எஸ்விடி.செங்கோல், எல். கணேசன், எம்எஸ்கே.சின்னராஜா, என்.சங்கர், கே.சந்திரசேகர், டி.பாபுஜான், ஒய். அருண்ஜார்ஜ், இராம.தமிழரசன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம் நன்றி தெரிவித்து பேசுகிறார்.

வரவேற்பு குழு: ஆர்.எஸ். ராஜ சரவணன், ஏ.கே.செல்வம், ஏ.முகமது ரபீக், ராஜ சரவணன், கே.பழனியப்பன், கேவி.சண்முகசுந்தரம், எல்பிஎப்.கே.பரமசிவம், வீர. பாலாஜி, ஆர்.பாலமுருகன், கே.பிரசாத் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக, பேரூர் கழக மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளும், கழக அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும், குழந்தை விநாயகர்கோட்டை ஊராட்சி பொதுமக்களும், நண்பர்களும் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கழக இளைஞரணி செயலாளர்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு காரைக்கால் மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜிம், எம்.எல்.ஏ. தலைமையில் இளைஞரணி அமைப்பாளர் முகமது ரிஃபாஸ் முன்னிலையில் மாநில இளைஞரணி சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ச. அன்பழகன்**
**நவம்பர் 29 (2022)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**பேரூர் வார்டு செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**மேச்சேரி கூட்டுறவு வீட்டு வசதி சங்க தலைவராகவும், மேச்சேரி கூட்டுறவு பட்டு கூட்டுறவு சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பிறந்த நாளை சிறந்த நாளாக்கிய அனைவருக்கும் நன்றி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது பிறந்த நாள் செய்தியில் நெகிழ்ச்சி!

**சென்னை, நவ. 29 -**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்த நாள் (27.11.2023) செய்தியில், "பிறந்த நாளை சிறந்த நாளாக்கிய அனைவருக்கும் நன்றி" என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள பிறந்த நாள் செய்தி வருமாறு :-

பிறந்த நாள் என்பது ஆண்டுதோறும் வரும் இன்னொரு நாள்தான். ஆனால், அதை நம் சுற்றமும் சூழலும் சேர்ந்து வாழ்வில் மறக்கமுடியாத சிறந்த நாளாக மாற்றுவதை நினைக்கையில் மகிழ்வாகவும் நெகிழ்வாகவும் இருக்கிறது. அதே நேரம் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டியதற்கான கால கடிகாரமாகவும் இந்த நாளை நான் பார்க்கிறேன்.

### கழகத் தலைவரின் முதல் வாழ்த்து!

இன்றைய பிறந்த நாளில், மாண்புமிகு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் வாழ்த்துதான் முதல் வாழ்த்து. நேரில் சென்றதும், 'இளைஞர் அணி மாநாடு குறித்து, நான் முரசொலியில் எழுதிய கடிதத்தைப் படித்தாயா?' என்றபடி வாழ்த்தினார்கள்.

1988ஆம் ஆண்டு சென்னையில் தேசிய முன்னணித் தொடக்க விழா பேரணியில், தன்னுடைய தலைமையில், கழக இளைஞர் அணியினர் தேசிய கட்சித் தலைவர்கள் முன்னிலையில் அணிவகுத்து வந்ததை அந்தக் கடிதத்தில் நினைவுகூர்ந்துள்ள தலைவர் அவர்கள், அதேபோன்ற ஒரு பிரம்மாண்ட கூட்டத்தைச் சேலத்தில் என் தலைமையில் 2வது மாநில மாநாட்டில் திரட்ட உள்ளதைக் குறிப்பிட்டு, 'கடல் இல்லா சேலம், கருப்புச் சிவப்புக் கடலினைக் காணட்டும்' என்று அந்தக் கடிதத்தை முடித்திருந்தார்கள். அந்த வாழ்த்துகளுடன் நேரிலும் என்னை வாழ்த்தியது நிறைவாக இருந்தது.

அதன்பின்னர் கழகம் தந்த பேரறிஞர் அண்ணாஅவரின் தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் இருவரும் துயில்கொள்ளும் மெரினா கடற்கரையில் அவர்களது நினைவிடத்தில் கழகத்தின் மூத்தத் தலைவர்களுடன் சென்று மரியாதை செலுத்தினேன்.

### திருவள்ளுவர் சிலை முன்பு தொடங்கிய மாபெரும் இரு சக்கர வாகனப் பேரணி!

கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு, 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கம் ஆகியவற்றின் நோக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், கடந்த 15ஆம் தேதி குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை முன்பு மாபெரும் இருசக்கர வாகனப் பேரணியைத் தொடங்கிவைத்தேன். அப்போது 'கோட்சே தூக்கிலிடப்பட்ட இந்நாளில், கோட்சேவின் பேரன்களுக்கு எதிராக, பெரியாரின் பேரன்கள் கன்னியாகுமரி காந்தி மண்டபத்திலிருந்து புறப்படுகி றோம்' என்று என் சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிர்ந்திருந்தேன்.

அன்று தொடங்கி, தமிழ்நாட்டின் 234 தொகுதிகளையும் 4 மண்டலங்களாகப் பிரித்துக் கடந்த 13 நாட்களாக இருசக்கர வாகனங்களில் வலம் வந்த இளைஞர்கள் இன்று சேலத்தில் மாநாட்டுத் திடலில் ஒன்றுகூடி, தங்களின் பேரணியை நிறைவு செய்கின்றனர். அவர்கள் நிறைவு செய்யும் அந்தத் தருணத்தில் நாங்கள் இன்று அய்யா பெரியாரின் நினைவிடத்தில், மலர் தூவி மரியாதை செய்துகொண்டிருந்தோம். இந்த ஒற்றுமை, நெகிழ்வையும் நிறைவையும் தந்தது.

### ஆசிரியர் அய்யா வாழ்த்து கடிதம்!

பெரியார் திடலில் இனமான ஆசிரியர் அய்யா அவர்களை சந்தித்து வாழ்த்து பெறச் சென்றிருந்தபோது, 'திராவிட இயக்கக் கொள்கை ஜீவநதி உதயநிதி அவர்களுக்கு வாழ்த்துகள்' என்று இன்றைய விடுதலை நாளிதழில் அவர் தந்திருந்த என் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியை என்னிடம் காண்பித்து மகிழ்ந்தார்.

என்னுடைய கொள்கைப் பிடிப்பை வரிக்கு வரி பாராட்டி எழுதியிருந்த ஆசிரியர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன். அந்த வாழ்த்துச் செய்தியின் கடைசிவரியை, 'வயது ஏறுவது அவருக்கு மூப்பு அல்ல முதிர்ச்சியே' என்று முடித்திருந்தார். இதை வாழ்த்துக் கடிதம் என்பதைவிட, பெரியார் பேரனுக்கான பாடமாகவே எடுத்துக்கொள்கிறேன். இனமான ஆசிரியர் அவர்களுக்கு இனமான மாணவனின் நன்றி.

என் பிறந்தநாளை சிறந்த நாளாக்குவதில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களும் ஒருவர். என் பிறந்த நாளை முன்னிட்டு கழக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி, மாணவ மாணவிகளுக்கு உயர்கல்விக்கான ஊக்கத் தொகையை, பெரியார் திடலில் என் கைகளால் வழங்க வைத்த அவருக்கு என் அன்பும் நன்றியும்.

அதன்பின்னர் கலைஞருடைய கோபாலபுரம், சி.ஐ.டி. காலனி இல்லங்களுக்குச் சென்று பாட்டிகளிடமும் கழகத் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்தை கனிமொழி அவர்களிடமும் வாழ்த்துப் பெற்றேன்.



அதைத் தொடர்ந்து என் தொகுதியில் நான் கலந்துகொண்ட இரு நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்வாக, என்றென்றும் நினைவில் நிற்கக்கூடிய நிகழ்ச்சிகளாக அமைந்தன.

### சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் சிலை திறப்பு விழா!

ஒன்று சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் சிலைத் திறப்பு விழா. வி.பி. சிங் அவர்கள் என் மனதுக்கு நெருக்கமான தலைவர்களில் ஒருவர். அவருடைய சிலை, அவருடைய நினைவு நாளான இன்று, என்னுடைய சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைத்து, என் தொகுதிக்கு மேலும் பெருமை சேர்த்துத் தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**பிறந்த நாள் வாழ்த்துகளை, நான் மென்மேலும் உற்சாகத்துடன் உழைப்பதற்கான எரிபொருளாகவே எடுத்துக்கொள்கிறேன். பாசிச சக்திகளை வீட்டுக்கு அனுப்ப, `இந்தியா கூட்டணி'யின் ஒற்றுமையை, சக்தியை உலகுக்குப் பறைசாற்றும் வகையில், மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் சேலத்தில், வரும் டிசம்பர் 17ஆம் தேதி நாம் முன்னெடுக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டின் வெற்றிக்காக உழைக்க உறுதியேற்போம்.**

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த வி.பி.சிங் அவர்களின் சிலை, தமிழ்நாட்டில் அமைக்கப்படுவது ஏன்? என்று, ஒவ்வொரு இந்தியனும் தங்களுக்குள் கேள்வி கேட்டுக்கொண்டால், அவரின் சிலை ஒவ்வொரு மாநிலத்திலும் அல்லவா அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எழும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசுப் பணிகளில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பி.பி.மண்டல் தலைமையிலான ஆணையத்தின் பரிந்துரையைச் செயல்படுத்தி சமூக நீதியை நிலைநாட்டிய வி.பி.சிங் அவர்களுக்குக் கலைஞருடைய இடத்தில் இருந்து நம் முதலமைச்சர் அவர்கள் அந்தச் சிறப்பைச் சேர்த்துள்ளார்கள்.

இந்தச் சிலை திறப்பு விழாவுக்கு வி.பி.சிங் அவர்களின் மனைவி உள்பட குடும்பத்தினரையும் உத்தரபிரதேசத்தில் இருந்து முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களையும் அழைத்திருந்தது மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.

### கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவைத் திறந்து வைத்தோம்!

அதைத்தொடர்ந்து என் தொகுதிக்கு உட்பட்ட `லேடி வில்லிங்டன் மகளிர் மாதிரி மேல்நிலைப் பள்ளி'யின் நூற்றாண்டு நிறைவையும் கலைஞர் நூற்றாண்டு தொடக்கத்தையும் கொண்டாடும் வகையில், என் பெயரிலான அறக்கட்டளையின் சார்பில், அமைக்கப்பட்ட நினைவு வளைவை திறந்து வைத்தோம்.

இன்னும் எத்தனை பிறந்த நாள் வந்தாலும் இந்தக் கல்விக் கூடங்களின் வளாகங்களில் நடைபெற்ற இந்த இரு நிகழ்ச்சிகளும் என் மனதில் என்றும் பசுமையாக நினைவில் நிற்கும்.

அதைத் தொடர்ந்து குறிஞ்சி இல்லத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், திரைத் துறையினரின் வாழ்த்தைப் பெற்றேன். கழகத்தினர் நீண்ட வரிசையில் காத்திருந்து, என்னை வாழ்த்தி மகிழ்ந்தனர். கழகத்தினர் பொன்னாடை, பூங்கொத்துகளை அன்பளிப்பாகத் தருவதைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக, இல்லம் அருகிலேயே மகளிர் சுய உதவிக் குழுவின் 'மதி தயாரிப்பு' பொருட்களின் விற்பனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதன் பிறகு கழக நிர்வாகிகள் இளைஞர் அணி சகோதரர்களுடன் மதிய உணவு உண்டு மகிழ்ந்தேன்.

கழகத்தினர் எனக்கு வழங்கிய 'மதி தயாரிப்பு' பொருட்களை என் தொகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று வழங்கி மகிழ்ந்தேன்.

கழகத் தலைவர், பொதுச் செயலாளர், முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி மக்கள், கழக இளைஞர் அணியைச் சேர்ந்த சகோதரர்கள், அரசு அதிகாரிகள், காவல் துறையினர்,

### அரசியல் கட்சித் தலைவர்கள்- திரையுலகினருக்கு நன்றி!

அய்யா ஆசிரியர் அவர்கள், அண்ணன் கே.எஸ்.அழகிரி, அண்ணன் வைகோ. அண்ணன் திருமாவளவன், அண்ணன் பாலகிருஷ்ணன், அண்ணன் முத்தரசன், அண்ணன் ஜவாஹிருல்லா, அண்ணன் அப்துல் சமது, அண்ணன் திருநாவுக்கரசர், அண்ணன் பீட்டர் அல்போன்ஸ், அண்ணன் செல்வப்பெருந்தகை, சகோதரர் துரை வைகோ,

சூப்பர் ஸ்டார் ரஜினி சார், உலக நாயகன் கமல் சார், சத்யராஜ் சார், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் சார், இயக்குநர்கள் அருண்ராஜா காமராஜ் சார், மாரிசெல்வராஜ் சார், சகோதரர்கள் சிவகார்த்திகேயன், சந்தானம், சூரி மற்றும் கீர்த்தி சுரேஷ், முரளி ராமசாமி உள்ளிட்ட தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகள்... இப்படி நேரிலும் அலைபேசியிலும் வாழ்த்தியவர்கள், சமூக வலைத்தளங்களின் வாயிலாக வாழ்த்தியவர்கள் என அனைவருக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிஞ்சி இல்லத்தில் தொண்டர்களின் வாழ்த்துகளைப் பெற விரிவான ஏற்பாடுகளை செய்திருந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் சகோதரர் சிற்றரசு, அண்ணன் மயிலை வேலு ஆகியோருக்கும் நன்றி.

பிறந்த நாள் வாழ்த்துகளை, நான் மென்மேலும் உற்சாகத்துடன் உழைப்பதற்கான எரிபொருளாகவே எடுத்துக் கொள்கிறேன். பாசிச சக்திகளை வீட்டுக்கு அனுப்ப, `இந்தியா கூட்டணி'யின் ஒற்றுமையை, சக்தியை உலகுக்குப் பறைசாற்றும் வகையில், மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் சேலத்தில், வரும் டிசம்பர் 17ஆம் தேதி நாம் முன்னெடுக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டின் வெற்றிக்காக உழைக்க உறுதியேற்போம்.

**வாழ்த்திய அனைவருக்கும் என் அன்பும் நன்றியும்.**

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது பிறந்த நாள் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளர்/ இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2023) தனது 46ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, முத்தமிழ்த் தேர் பவனி கரூர் மாவட்டத்திற்கு வருகை தந்த போது உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கரூர் பேருந்து நிலையம் அருகே கழகத்தினர் மாணவ, மாணவியர் பொதுமக்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.






# சமதர்மத்தின் பொன் ஒளியே!
# சனாதனத்தின் சவுக்கடியே!!

அன்புடன் வாழ்த்தி மகிழும்...

## எ.வ.வேலு
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

## கு.பிச்சாண்டி
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்

அன்பன்

**எ.வ.வே.கம்பன்**
மாநில கழக மருத்துவர் அணி துணைத் தலைவர்

**மருத்துவர் அணி தி.மு.க.**



சேலம் மாவட்டம் பெத்தநாய்க்கன் பாளையத்தில் தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாடு நடைபெறுவதையொட்டி மாநாட்டின் பந்தல் அமைக்கும் பணியை நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என். நேரு நேரில் பார்வையிட்டு துரிதமாக பணியை முடிக்க உத்தரவிட்டார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ சேலம் மத்திய மாவட்டம் டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு மாவட்டம் க.சுரேஷ் குமார். மாவட்ட துணைச்செயலாளர் (சேலம் கிழக்கு) உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

### திருவொற்றியூரில் நல உதவிகள் வழங்கல்

திருவொற்றியூர், நவ.29-

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் அனைத்து வட்டங்களிலும் இருவண்ணக் கொடியேற்றி இனிப்பு வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி பகுதி கழக செயலாளர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் 3வது வட்டம் நேதாஜி நகர் பகுதியில் ஆர். நவக்குமார் வரவேற்பில். 3 (அ ) வட்டக் கழக செயலாளர் பி. தமிழரசன் எம்.சி. முன்னிலையில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து காசிக்கோயில் குப்பம் ஆரம்ப பள்ளி மாணவ மாணவிகள் 200 பேருக்கு புத்தாடைகள் வழங்கினார்.

பின்னர் மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன் பகுதி கழகத் துணைச் செயலாளர் யூ. எஸ். குறளரசன் 4 வது வட்ட செயலாளர் கே. பவுல் மாவட்ட பிரதிநிதிகள் ந. ராம்குமார், ஜி. தினேஷ், பொன். கோ. விஜயன், வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் அரிமா வி.தியாகராஜன் லயன் எஸ்.இளங்கோ வி. கே. ஏழுமலை மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் பொன்னமராவதி ஒன்றியம் ஆலவயலில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற கபாடி போட்டியை தமிழக சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில தெற்கு ஒன்றிய செயலாளர் அ.அடைக்கலமணி, நகர கழக செயலாளர் அ.அழகப்பன், பொன்னமராவதி வடக்கு ஒன்றிய செயலாளர் அ.முத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், சக்திவேல், இளையராஜா,ஆலவயல் ராமு, ஷாஜகான், ஆலவயல் சாமிநாதன், கதிரேசன், செல்வி அன்னராசு, சீமாட்டி லத்தீப், கோவை ராமன், மச்சக்காளை, முத்தையா, சுந்தரி ராமையா, மணப்பட்டி பழனிச்சாமி, காளிதாஸ், ஆறுமுகம், எம்.தில்லையப்பன், ஆலவயல் நாகராஜ், கண்டியாநத்தம் ஆண்டியப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வல்லம் ஒன்றியம் இல்லோடு ஊராட்சியில்

# ரூ.37லட்சம்மதிப்பீட்டில்கட்டப்பட்ட3வகுப்பறைகட்டிடங்கள்!

## அமைச்சர் செஞ்சிமஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, நவ. 29-

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் இல்லோடு ஊராட்சியில் ஆர்.சி. தொடக்கப்பள்ளி இயங்கி வருகிறது.

இப்பள்ளிக்குமங்கள புரம் தலைமைஇடமாகக் கொண்டுள்ள பி.எம்.டி. தொண்டு நிறுவனத்தின் சார்பில் 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக 3 வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கடலூர் டி.ஒ.எஸ்,நடுநிலைப் பள்ளிகளின் மேலாளர் அருள்நாதன், இல்லோடு ஊராட்சி மன்ற தலைவர் இந்திரா பழனி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இல்லோடு ஆர்.சி. பள்ளி தகவலாளர் தந்தை ஜெயசீலன் தலைமை தாங்கினார்.

புதுவை மற்றும் கடலூர் மாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் கலந்து கொண்டு புதிய பள்ளி கட்டிடத்தை ஆசீர்வதித்தார்.

இதைத் தொடர்ந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதியதாக கட்டப்பட்ட மூன்று வகுப்பறை கட்டிடத்தினையும் , பெயர் பலகையும் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றத்தில் இருந்து பெண்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் குறிப்பாக கிராமப் பெண்பிள்ளைகள்

கல்வி அறிவு பெற வேண்டும் என்பதற்காக புதுமைப் பெண் திட்டத்தை தொடங்கி வைத்து அவர்கள் உயர்கல்வி வரை படிப்பதற்காக மாதம் ஆயிரம் ரூபாய் என ஒரு வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாயும், இரண்டு வருடத்திற்கு 24 ஆயிரம் ரூபாயும், மூன்று வருடத்திற்கு 36 ஆயிரம் ரூபாய், வழங்கி வருகிறார் ஆகவே பெற்றோர்கள் தங்களது பெண் பிள்ளைகளை உயர்கல்வி வரை படிக்க வைக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் பி எம் டி தொண்டு நிறுவனத் தலைவர் ஆரோக்கியசாமி,கக்கனூர் ஊராட்சி மன்ற தலைவர் சகாயமேரி ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர்.

இதில்வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை. துரை, இளம்வழுதி,தென் சென்னை தெற்கு மாவட்ட அமைத்தலைவர் சைதை குணசேகரன்,பி எம் டி தொண்டு நிறுவனத்தின் துணைத் தலைவர் அன்பரசு,வட்டார கல்வி அலுவலர் முருகன் வட்டார வள மேற்பரையாளர் நெடுஞ்செழியன் பள்ளி துணை ஆய்வாளர் விநாயக மூர்த்தி மற்றும் ஆர்சி பள்ளி தலைமை ஆசிரியர்கள் இல்லோடுஅருள்தாஸ்,மரக்காணம் மோகன் குமார், சத்தியமங்கலம் மரிய அந்தோணி தாஸ், மணலப்பாடி வனத்து சின்னப்பன், மேல்சித்தாமூர் மேரி இமாகுலேட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

# மாணவர் அணி சார்பில் நல உதவிகள்!

## தடங்கம் பெ.சுப்பிரமணி வழங்கினார்!

தருமபுரி, நவ. 29 -

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்டக் கழக செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி பங்கேற்று நல உதவிகள் வழங்கினார்.

தர்மபுரி மாவட்டம் இண்டூரில் இளைஞர் நலன் மேம்பாட்டு மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கிழக்கு மாவட்ட திமு.க. மாணவர் அணி அமைப்பாளர் பெரியண்ணன் ஏற்பாட்டில் 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.இதில் கலந்து கொண்ட கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் சுப்ரமணி 100க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பை வழங்கினார். உடன் அவை தலைவர் செல்வராஜ், மாவட்ட பொருளாளர் வே.தங்க மணி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் தர்மசெல்வன், மாவட்ட துணை செயலாளர் ரேணுகா தேவி, நல்லம் பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வைகுந்தம், கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சண்முகம்,

இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர். அசோக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உமாசங்கர், வானவில் சண்முகம், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.துரைசாமி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் நல உதவிகள்!

## குன்னம் சி.இராஜேந்திரன் வழங்கினார்!

பெரம்பலூர், நவ. 29 -

பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் , ஆலத்தூர் கிழக்கு , ஆலத்தூர் மேற்கு, வேப்பூர் வடக்கு, வேப்பூர் தெற்கு,வேப்பந்தட்டை கிழக்கு , வேப்பந்தட்டை மேற்கு ஆகிய ஒன்றியங்களில்,

இளைஞர் அணிச் மாநில செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் தலைமையில், கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

பெரம்பலூர் ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் எம்.ராஜ்குமார் தலைமையில் கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

ஆலத்தூர் கிழக்கு ஒன்றியத்தில், ஒன்றியச் செயலாளரும் ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், செட்டிக்குளம் ஊராட்சியில்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் மருத்துவர் செ.வல்லபன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் , ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.நல்லத்தம்பி தலைமையில், அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து,கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதில் ஒன்றிய அவைத் தலைவர் அம்பேத்கர், வேப்பந்தட்டை ஒன்றிய குழு தலைவர் க. ராமலிங்கம்,

வேப்பந்தட்டை ஒன்றிய துணைச் செயலாளர் மருதாம்பாள் செல்வகுமார், வேப்பந்தட்டை ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் எம். ரெங்கராஜ், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் க.ரமேஷ் வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்ஆர். கணேசன், துணை அமைப்பாளர் செல்வராஜ், வெங்கலம் ஊராட்சி கிளை கழக செயலாளர்கள் பன்னீர் செல்வம், சக்திவேல்,சரவணன், சின்னத்தம்பி, ஜெயராமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியத்தில், ஒன்றியச் செயலாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தி.மதியழகன் ஏற்பாட்டில் 46 கிலோ கேக் மற்றும் 46 கிலோ இனிப்புகள் ஆகியவற்றை பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

வேப்பூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் மருவத்தூர் சி.ராஜேந்திரன் தலைமையில் கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர் தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு வேலா கருணை இல்லத்தில் இருக்கும் 150க்கும் மேற்பட்டவர்களுக்கு மதிய உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம், நகர 18 வது வார்டு கழக செயலாளர் அஜித் மற்றும் கமல்,சபரி உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உறுப்பினர் எம்.பிரபாகரன், வேலா கருணை இல்லத்தில் இருக்கும் 150க்கும் மேற்பட்டவர்களுக்கு மதிய உணவு வழங்கினார்.

பெரம்பலூர் நகரத்திற்குட்பட்ட 18 வது வார்டுச் செயலாளர் அஜித் ஏற்பாட்டில்,

பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் என். ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு,

கழகக் கொடியேற்றி 15 கிலோ கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் மாது மற்றும் நகர நிர்வாகிகள் கமல், சபரி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம்!

## விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 01.12.2023 வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணி அளவில், திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையிலும் விவசாய அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்-அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி, திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ந.தியாகராஜன், எம்.எல்.ஏ., திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் க.வைரமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: டிசம்பர் - 17 சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு மற்றும் விவசாய அணியின் ஒன்றிய நகர பகுதிக் கழக மற்றும் பேரூர் புதிய நிர்வாகிகள் நியமனம் தொடர்பாக.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 27.11.2023

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.



கழக இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தலைமையில் கேக் வெட்டி பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் என்.சேட்டு, எஸ். வெங்கடாச்சலம், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், எம்.செந்தில்குமார், ராஜேந்திரசோழன், அஸ்ரப் அலி, துவாரை டி.செல்வம், கவீரய்யா, எம்.ஏ.எம்.இம்தியாஸ், வி.எஸ்.பழனி, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், ராயல் சபா, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம்வல்லம் ஒன்றியம் இல்லோடு ஊராட்சியில் தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் 37 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 3 வகுப்பறை கட்டிடத்தைசிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் திறந்து வைத்தார்.உடன் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி பள்ளி நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி எம்.எஸ். மணி

**நவம்பர் 29 (1980)**



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின்பால் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்.

திருச்சி மாவட்டத்தில் தி.மு.கழகம் தழைத்தோங்க தொடக்கக் காலந்தொட்டுப் பெரும் பணியாற்றியவர்.

திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். இவர் தொழிற்சங்க இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான மாண்புமிகு

# உதயநிதி ஸ்டாலின் அவர்களின்

**47வது பிறந்தநாளை முன்னிட்டு.... ஏழை எளியோர், முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள், மாணவர்கள், சாலை ஓரங்களில் தனியாக வசிப்போர் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில்...**

## திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க சார்பில்...

24-11-2023 முதல் ஒரு மாத காலமாக கொண்டாடப்படுகிறது. பிறந்தநாள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, நாள், இடம், ஏற்பாடு செய்யும் அமைப்பு கீழ்கண்டவாறு நடைபெற இருக்கிறது. இதில் கழக மாநில, மாவட்ட ,மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் வட்ட, கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு.. **டி.பி.எம்.மைதீன்கான்** திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறுப்பாளர்

| வ.எண் | நாள் | இடம் | நிகழ்ச்சி விபரம் | ஏற்பாடு செய்யும் அமைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 24-11-2023, 25-11-2023 26-11-2023 (3 நாட்கள்) | மினி-அண்ணா ஸ்டேடியம், மேலப்பாளையம் | கிரிக்கெட் போட்டி | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி எஸ்.பலராமன், S.P.வீரபாண்டியன் பல்லிக்கோட்டை செல்லத்துரை, சுரேஷ் நடராஜன், மாலதி கண்ணன், M.A.தீன் |
| 2. | 26-11-2023, | பாளையங்கோட்டை | காது கேளாதோர் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்குதல் | துணை மேயர் கே.ஆர்.ராஜு |
| 3. | 26-11-2023, | ராணி அண்ணா அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகம், பேட்டை | கண் சிகிச்சை முகாம் | மாண்புமிகு உதயநிதி ஆட்டோ தொ.மு.ச |
| 4. | 27-11-2023, | திருநெல்வேலி மற்றும் பாளை சட்டமன்ற தொகுதி | திருநெல்வேலி மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் காலை உணவருந்தும் 5930 மாணவச் செல்வங்களுக்கு கேக் வழங்குதல் | மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் |
| 5. | 27-11-2023, | பேட்டை மாநகராட்சி துவக்கப்பள்ளி | இனிப்பு வழங்குதல் | பேட்டை இளைஞரணி சுபுஹானி, அப்துல் |
| 6. | 27-11-2023, | வண்ணார்பேட்டை அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற கழக அலுவலகம் முன்பு | 100 நபர்களுக்கு அரிசி, காய்கறி வழங்குதல் | தொழிலாளர் முன்னேற்ற சங்கம் A.தர்மன், மாவட்ட துணைச்செயலாளர் மற்றும் தொ.மு.ச பொதுச்செயலாளர் |
| 7. | 27-11-2023, | கே.டி.சி.நகர் அரசு போக்குவரத்து கழகம் பணிமனை முன்பு வண்ணார்பேட்டை அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற கழக அலுவலகம் முன்பு | 500 பேர் பொதுமக்கள் மற்றும் தொழிலாளிகளுக்கு இனிப்பு வழங்குதல் | விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் P.கருப்பசாமி (எ) செல்வம் |
| 8. | 27-11-2023, | கைலாசபுரம் | கைலாசபுரத்தில் உள்ள முதியோர்களுக்கு உணவு வழங்குதல் | கங்கைகொண்டான் ஊராட்சி தலைவர் கவிதா பிரபாகர் |
| 9. | 27-11-2023, | துறையூர் | இனிப்பு வழங்குதல் | |
| 10. | 27-11-2023, | கட்டாரங்குளம் | இனிப்பு வழங்குதல் | |
| 11. | 27-11-2023, | தென்கலம் | இனிப்பு வழங்குதல் | |
| 12. | 27-11-2023, | அணைத்தலையூர் | இனிப்பு வழங்குதல் | |
| 13. | 27-11-2023, | கங்கைகொண்டான் | இனிப்பு வழங்குதல் | |
| 14. | 27-11-2023, | மேல தாழையூத்து | இனிப்பு வழங்குதல் | |
| 15. | 27-11-2023, | சுத்தமல்லி, அன்னை ஆனந்தஜோதி ஆதரவற்றோர் இல்லம் | ஆதரவற்ற குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குதல் | மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மாரியப்பன் |
| 16. | 27-11-2023, | சுத்தமல்லி விலக்கு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மாரியப்பன் |
| 17. | 27-11-2023, | புதூர் முதியோர் இல்லம் | மதிய உணவு வழங்குதல் | மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மாரியப்பன் |
| 18. | 27-11-2023, | கல்லூர் பகுதி | விவசாய பணிகளில் ஈடுபடும் விவசாய தொழிலாளர்களுக்கு இனிப்பு வழங்குதல் | மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மாரியப்பன் |
| 19. | 27-11-2023, | சாலை ஓரங்களில் | சாலை ஓரங்களில் ஆதரவற்ற தனியாக வசிப்பவர்களுக்கு போர்வை வழங்குதல் | மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் C.S.அனித்தா, ஜெனிபர் |
| 20. | 27-11-2023, | டவுன் | திருவள்ளுவர் தெருவில் உள்ள பள்ளியில் 50 பள்ளி குழந்தைகளுக்கு நோட்-புத்தகம் மற்றும் இனிப்பு வழங்குதல் | ரியல் ஆர்.சுரேஷ், நெல்லை ரவி, கே.டி.சி. மாரியப்பன் மாவட்ட பிரதிநிதி ஏ.ஆர் சுரேஷ் |
| 21. | 28-11-2023, | பிஷப் பள்ளி | மதிய உணவு வழங்குதல் | மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் L.முகம்மது மீரான் |
| 22 | 28-11-2023, | அரசு பொது மருத்துவமனை பாளையங்கோட்டை | 27-11-2023 அன்று அரசு பொது மருத்துவமனையில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் 28-11-2023 அன்று தங்க மோதிரம் வழங்கப்படும் | திருநெல்வேலி மாநகராட்சி மேயர் P.M.சரவணன் |
| 23 | 28-11-2023, | அரசு சட்டக்கல்லூரி பாளையங்கோட்டை | சட்டக்கல்லூரி மாணாக்கர் களுக்கு சட்டப்புத்தகங்கள் வழங்குதல் | மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காமினி தேவன் |
| 24 | 29-11-2023, | அரசு மருத்துவமனை கண்டியப்பேரி | கண்டியப்பேரி பொது மருத்துமனை வளாகத்தில் அமைந்துள்ள முதியோர் மற்றும் மனநிலை குன்றியோர்களுக்கு மதியம் உணவு வழங்குதல் | அமைப்புசாரா ஓட்டுநர் அணி குழந்தை ஏசு. பரமானந்தன் மாரியப்பன், பேச்சிமுத்து ராஜகனி, ஆனந்தகுமார் கிறிஸ்துராஜா, முத்துராக் செல்வமயில் |
| 25 | 30-11-2023, | கருப்பந்துறை | புனித யாகப்பர் துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு மதியம் உணவு வழங்குதல் | மாவட்ட விவசாயஅணி துணை அமைப்பாளர் கருப்பந்துறை ராஜு ப.நவநீதன் Ex.M.C., |
| 26 | 30-11-2023, | திருநெல்வேலி ஜங்ஷன் | கைலாசபுரம் ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்குதல் | மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் சொ.பெருமாள் |
| 27 | 01-12-2023, | MOC ஹைகிரவுண்ட் | MOC முஸ்லிம் ஆதரவற்ற 300 குழந்தைகளுக்கு மதியம் உணவு வழங்குதல் | மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராஜா முகம்மது |
| 28 | 02-12-2023, | என்.ஜி.ஓ ஏ காலனி | சுகம் டிரஸ்டில் இருப்பவர்களுக்கு இரவு உணவு வழங்குதல் | மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் C.S.அனித்தா, ஜெனிபர்செல்வராணி |
| 29 | 02-12-2023, | சங்கர் காலனி | முதியோர் இல்லத்தில் உணவு வழங்குதல் | மாவட்ட சிறுபான்மைநலஉரிமைப் பிரிவு அமைப்பாளர் வழக்கறிஞர் A.நவ்சாத் மாவட்ட சிறுபான்மைநலஉரிமைப் பிரிவு தலைவர் Lion A.முகம்மது அலி |
| 30 | 03-12-2023, | கண்டியப்பேரி | கண்டியப்பேரி பொது மருத்துமனை வளாகத்தில் அமைந்துள்ள முதியோர் மற்றும் மனநிலை குன்றியோர்களுக்கு மதியம் உணவு வழங்குதல் | மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் S.பாலசுப்பிரமணியன் துணை அமைப்பாளர்கள் : C.ஆறுமுகராஜா, வினோத், முத்துகிருஷ்ணராஜா, ரம்ஜான் அலி, அஸ்வின் பேபி |
| 31 | 03-12-2023, | குறிச்சி | முதியோர் இல்லத்தில் மதியம் உணவு வழங்குதல் | ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ப.நவநீதன் Ex.M.C., |
| 32 | 03-12-2023, | திம்மராஜபுரம் மெயின் பஜார் மற்றும் வசந்தம் மஹால் எதிர்புறம் | கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல் | 5வது வட்ட கழக செயாலார் எம்.பத்மராஜ் |
| 33 | 03-12-2023, | பேட்டை முனிசிபல் ஸ்டாப் அருகில் மாநகராட்சி துவக்கபள்ளி | கண்சிகிச்சை முகாம் மற்றும் பல் பரிசோதனை முகாம் | மாநகர மகளிரணி துணை அமைப்பாளர் ஹமீதா |
| 34 | 04-12-2023, | தச்சநல்லூர் | மாபெரும் நலத்திட்டம் வழங்கும் விழா | மாநில வர்த்தகர் அணி இணைச்செயலாளர் என். மாலைராஜா Ex.M.L.A., |
| 35 | 04-12-2023, | மானூர் மேற்கு ஒன்றியம் தெற்குபட்டி ஊராட்சி | தெற்குப்பட்டி நாவலுத்து குளக்கரையில் 2000 பனைமர விதைத்தல் மற்றும் 300 பழமர கன்றுகள் வழங்குதல் | தெற்குபட்டி மானூர் மேற்கு ஒன்றியம் ஐயப்பன் |
| 36 | 04-12-2023, | மேலப்பாளையம் | மேலப்பாளையம் பொதுமக்களுக்கு பிரியாணி வழங்குதல் | மாவட்ட அயலக அணி SKA ஹைதர் அலி தலைவர் துபாய் இஸ்மாயில் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் : T.S.M.O.பாதுஷா, ஒவியர் கமரி, நியாஸ் அலி, மாரியப்பன், செல்வ ஆனந்த் |
| 37 | 04-12-2023, | குறுக்குத்துறை | முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்குதல் | நெசவாளர் அணி துணை அமைப்பாளர் விளாகம் பாலு |
| 38 | 05-12-2023, | பேட்டை சாஸ்திரிநகர் | தொழு நோயாளிகள் காலனியில் மதிய உணவு வழங்குதல் | மாவட்ட வர்த்தகர் அணி மு.சேக் தாவூது அமைப்பாளர் அவதார் ஷாஜஹான் (தலைவர்), முத்துப்பாண்டி (துணைத்தலைவர்) துணை அமைப்பாளர்கள் மைக்கேல் செ.ராஜேஷ்,சீனிவாசன், நெல்லையப்பன், மாரியப்பன், ரவி, வித்யா கன்னன், R.D.கன்னன், அப்துல் ரகுமான் |
| 39 | 06-12-2023, | டவுண் | அன்னதானம் வழங்குதல் | எம்.மாரிமுத்து 26வது வட்ட செயலாளர் |
| 40 | 06-12-2023, | டவுண் | மரம் நடுதல் | எம்.மாரிமுத்து 26வது வட்ட செயலாளர் |
| 41 | 07-12-2023, | பாளையங்கோட்டை | அண்ணா விளையாட்டு மைதானம் எதிரில் உள்ள பார்வை அற்றோர் பள்ளியில் இரவு உணவு வழங்குதல் | விஜிலா சத்யானந்த் Ex.M.P., மகளிர் தொண்டர் அணி மாநில துணைச்செயலாளர் |
| 42 | 08-12-2023, | பாளையங்கோட்டை | DIG பங்களா எதிரில் உள்ள முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்குதல் | விஜிலா சத்யானந்த் Ex.M.P., மகளிர் தொண்டர் அணி மாநில துணைச்செயலாளர் சீதா பாலன் ராஜா M.C., |
| 43 | 09-12-2023, | வீரமாணிக்கபுரம் | 50 பெண்களுக்கு சேலை வழங்குதல் | இசக்கி 43வது வட்ட கழக செயலாளர் |
| 44 | 10-12-2023, | பாளை மத்திய நூலகம் | அரசு தேர்வாணயம் மூலம் நடைபெறும் பயிற்சியில் உள்ள 47 நபர்களுக்கு பாடப் புத்தகம் வழங்குதல் | துரைசக்தி சீதா ராஜவர்மன் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் |
| 45 | 10-12-2023, | மேலப்பாளையம் | மகளிர்க்கான இலவச சிறப்பு மருத்துவ முகாம் - டாக்டர் ஆஷிகா | மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் ஏற்பாட்டில் மேலப்பாளையம் பகுதி கழகம் செயல்படுத்தும் |
| 46 | 11-12-2023, | பேட்டை | மருத்துவ முகாம் - ராணி அன்னா மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி, பேட்டை | துரைசக்தி சீதா ராஜவர்மன் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் |
| 47 | 12-12-2023, | பாளையங்கோட்டை | தொழில் வழிகாட்டி மற்றும் தொழில் கடன் வழிகாட்டி முகாம் | துரைசக்தி சீதா ராஜவர்மன் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் |
| 48 | 13-12-2023, | அரசுப்பள்ளிகள் | கல்வி வழிகாட்டு முகாம் | துரைசக்தி சீதா ராஜவர்மன் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் |
| 48 | 14-12-2023, | மேலப்பாளையம் | அரசு பொதுமருத்துமனையில்மகப்பேறு மகளிர்களுக்கு நலத்திட்டம் உதவிகள் வழங்குதல் | மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் C.S.அனித்தா, ஜெனிபர் |
| 50 | 15-12-2023, | பாளையங்கோட்டை | ஷாலோம் முதியோர் இல்லத்தில் உணவு வழங்குதல் | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் K.K.கருப்பசாமி கோட்டையப்பன் M.C., |
| 51 | 19-12-2023, | என்.ஜி.ஓ.ஏ காலனி | சுகம் டிரஸ்ட் முதியோர் இல்லத்தில் உணவு வழங்குதல் | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் K.K.கருப்பசாமி கோட்டையப்பன் M.C., |
| 52 | 20-12-2023, | பொதிகை நகர் ஆட்டோ நிறுத்தம் | ஆட்டோ ஓட்டுநர்களுக்கு இலவச சீருடை வழங்குதல் | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் K.K.கருப்பசாமி கோட்டையப்பன் M.C., |
| 53 | 21-12-2023, | ஜெபா கார்டன் | கொடியேற்றுதல் | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் K.K.கருப்பசாமி கோட்டையப்பன் M.C., |
| 54 | 22-12-2023, | என்.ஜி.ஓ.ஏ காலனி | பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஜோசப் கான்வென்ட் மரக்கன்று நடுதல் | மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் K.K.கருப்பசாமி கோட்டையப்பன் M.C., |
| 55 | 23-12-2023, | ஆணையார்குளம் | புனித அன்னாள் மனவளர்ச்சி குன்றிய காப்பகத்தில் உணவு வழங்குதல் | மாநகர இளைஞர் அணி துணைஅமைப்பாளர் குரு ஜெஸி |
| 56 | 24-12-2023, | ஆணையார்குளம் | புனித அன்னாள் மனவளர்ச்சி குன்றிய காப்பகத்தில் உணவு வழங்குதல் | மாநகர தொண்டரணி அமைப்பாளர் இம்மானுவேல் |
| 57 | 26-12-2023, | பாளையங்கோட்டை | DIG பங்களா எதிரில் உள்ள முதியோர் இல்லத்தில்போர்வை வழங்குதல் | மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சபி முகம்மது |
| 58 | 27-12-2023, | கங்கைகொண்டான் | கங்கைகொண்டான் பஞ்சாயத்துக்கு உட்பட்ட 547 நபர்களுக்கு வேஷ்டி-சேலை வழங்குதல் | மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சு.அருள்மணி |
| 59 | 29-12-2023, | கலைஞர் நூலகம் திருமால் நகர் | கலைஞர் நூலகத்திற்கு புத்தகம் வழங்குதல் | மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் |
| 60 | 28-12-2023, | பாளையங்கோட்டை அரசு பொதுமருத்துவமனை வளாகம் | 47 நிழல்தரும் மரக்கன்றுகள் நடுதல் | முன்னாள் மாவட்ட கழக பொருளாளர் பா.அருண்குமார் முன்னாள் மாவட்ட கழக துணைச்செயலாளர் S.P.கண்ணன் |

நிகழ்ச்சி ஏற்பாடு: **திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க**



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று முன்தினம் (27.11.2023) மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று முன்தினம் (27.11.2023), மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் க.பொன்முடி, தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, சி.வெ.கணேசன், மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று முன்தினம் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் உள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று முன்தினம் (27.11.2023), சென்னை – கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்த நாளையொட்டி, சென்னை – சி.ஐ.டி. காலனி இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தினார். அதுபோது, திருமதி ராஜாத்தி அம்மையார், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார்.




# திராவிடப் போராளிகள்

**45**

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

# பெயரை மாற்றிக் கொண்ட பெருமாட்டி மலர்முகத்தம்மையார்



ஓவியம் : ரவி பேலட்

ஒரு பெருமரத்தின் வளர்ச்சிக்கு எத்தனை இயற்கை வளங்கள் பங்காற்றி இருக்கின்றன? வேருக்கு நீரும் காற்றும் அருகில் இருக்கலாம். துளிர்க்கும் இலைகள் வழியே செடிக்கு உணவான பச்சையத்தைத் தயாரிக்க வெப்பத்தை வழங்கும் சூரியனோ 147.84 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது.

தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் கொள்கைகளும் போராட்டங்களும் வெற்றிபெறுவதற்கு அத்தகைய பங்களிப்புகளின் துணையும் இயல்பாக இருந்தன என்றே வரலாறு பேசுகிறது.

இதனை வெளிப்படையாக உணர்த்திய நிகழ்வுதான் 1938-ஆம் ஆண்டு நவம்பர் 13-ஆம் நாள் சென்னை ஒற்றைவாடை அரங்கில் நடைபெற்ற **‘தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு’**. அந்த மாநாட்டில்தான் தந்தை பெரியாரை **‘பெரியார்’** என்று மட்டுமே அழைக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## முதல் ஐவரில் ஒருவர்

மாநாட்டின் அறிவிப்பு விளம்பரத்தில்
மாநாட்டு அமைப்பாளர்,
டாக்டர் எஸ்.தருமாம்பாள் அம்மையார்,
மலர்முகத்தம்மையார் (புஷ்பவதி அம்மையார்)
என்று அச்சிடப்பட்டுள்ளது.

அந்த மாநாட்டினைத் தொடர்ந்து அடுத்த நாள் 14.11.1938 சென்னை, இந்து தியாலாஜிகல் பள்ளி முன்பாக நடந்த மறியல் போராட்டத்தில் பங்கேற்று, சிறைசென்ற முதல் ஐந்து பெண்களில் ஒருவர் மலர்முகத்தம்மையார். மற்றவர்கள் மூவலூர் இராமாமிர்தம், டாக்டர் தருமாம்பாள், அவரது மருமகள் சீதம்மாள், திருவாரூர் பட்டம்மாள். அவர்கள் அனைவருக்கும் ஆறு மாதம் சிறைதண்டனை விதிக்கப்பட்டது.

இப்படி மொழிப் போராட்டத்தின் முன்னணி வீராங்கனையாக நின்று ஆறு வாரம் சிறைதண்டனை அனுபவித்த மலர்முகத்தம்மையார் யார்?

## தமிழார்வத்தால் பெயர் மாற்றம்

சென்னை மயிலாப்பூரில், 1879-ஆம் ஆண்டு விசாலாட்சி - சிவானந்தம் ஆகியோரின் மூத்த மகளாகப் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்டபெயர் புஷ்பவதி. தமிழறிஞர் மயிலை சிவமுத்து, அம்மையாரின் உடன்பிறந்த தம்பி. அவர் மூலமே பல தமிழறிஞர்களை அறிந்து, தமிழ்மொழியில் ஈடுபாடு கொண்டார்.

புலவர் பூவை கலியாணசுந்தரனார், பேராசிரியர் மணி.திருநாவுக்கரசு, எஸ்.எஸ்.ஆனந்தன் ஆகியோரின் அறிமுகமும், மறைமலையடிகளார், தமிழ்த்தென்றல் திரு.வி.க ஆகியோரின் அன்பும் தமிழ்ப்பற்றுக் கொண்ட புஷ்பவதியின் பெயரை ‘மலர்முகம்’ என மாற்றியது. அவரது பெயரை தமிழாக்கியவர் தமிழறிஞர் அண்ணல் தங்கோ. வயது மற்றும் மதிப்பின் பொருட்டு அம்மையார் என்ற மரியாதைச் சொல் விகுதியாக அவர் பெயருடனே இணைந்து விட்டது.

**எளிய வாழ்க்கையிலும் தன் தம்பியிடம் தமிழ் கற்க வரும் வசதியற்ற மாணவர்களுக்கு உணவும் கொடுத்து, அவர்கள் தேர்வுக்குப் பணம் கட்டவும் உதவி செய்தார்.**

பெற்றோர் ஏற்பாட்டில் தணிகாசலம் என்பவருடன் திருமணம் நடந்தது. ஆனால், மலர்முகத்தம்மையாரின் திருமண வாழ்வு குறுகிய காலத்தில் முடிந்து விட்டது. எனவே, மயிலாப்பூரில் தன் தம்பியாருடன் வாழ்ந்து வந்தார்.

## தமிழ் கற்க உதவி

டாக்டர் தருமாம்பாள் அம்மையாரும், தமிழறிஞர் மயிலை சிவமுத்து அவர்களும் உருவாக்கிய ‘மாணவர் மன்றம்’ என்ற அமைப்பு, தமிழ்நாட்டு மாணவர்கள் தாய்மொழியின் சிறப்பை அறிவதற்கும் பிழையின்றித் தமிழ் எழுதவும் ஊக்கமளித்து வந்தது.

அந்த மாணவர் மன்றத்தை சிறப்புற நடத்தவும் அதற்கான சொந்தக் கட்டடம் ஒன்றை அமைக்கவும், மலர்முகத்தம்மையார் துணை நின்றார். வீடுவீடாகச் சென்று பொருளுதவி பெற்று அதனை மாணவர் மன்றத்தின் வளர்ச்சிக்கு வழங்கினார்.

மலர்முகத்தம்மையார் வசதிமிக்கக் குடும்பத்தில் பிறக்கவில்லை. ஆனால், எளிய வாழ்க்கையிலும் தன் தம்பியிடம் தமிழ் கற்க வரும் வசதியற்ற மாணவர்களுக்கு உணவும் கொடுத்து, அவர்கள் தேர்வுக்குப் பணம் கட்டவும் உதவி செய்தார்.

## தமிழ் மூதாட்டியின் தொண்டு

மொழிப்பற்றும், பக்தி இலக்கிய ஈடுபாடும் கொண்ட பண்டிதர் நாராயணி அம்மையாரின் உரைகளை விரும்பிக் கேட்ட மலர்முகத்தம்மையார் சைவ சமய இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றார். அந்தப் பண்டிதர் நாராயணி அம்மையார்தான் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டின் திறப்பாளர்.

ஆரவாரமற்ற தமிழ்த்தொண்டும், மொழி உரிமைப் போரில் முன் நின்ற வீரமும் அம்மையாருக்கு, தமிழறிஞர்களிடம் பெருமதிப்பை ஏற்படுத்தின. மாணவர் மன்றத்தின் சார்பாக, ஆசிரியமணி புலவர் அருணகிரிநாதர் தலைமையில் நடைபெற்ற விழாவில், மலர்முகத்தம்மையாருக்கு ‘தமிழ் மூதாட்டியார்’ என்ற பட்டம் வழங்கப்பட்டது.

இறுதிவரையிலும் கொண்ட கொள்கையில் உறுதி மாறாது வாழ்ந்த மலர்முகத்தம்மையார் 1963-ஆம் ஆண்டு மே மாதம் 19-ஆம் நாள் காலமானார்.

அவர் மறைவதற்கு ஓராண்டுக்கு முன்பு டாக்டர் தருமாம்பாள் காலமானார். அவருக்காக எழுதிய இரங்கல் செய்தியில், “என் வாழ்க்கையிலே நான் பெருமைகொள்ளும் நிகழ்ச்சி 1938-ஆம் ஆண்டிலே நிகழ்ந்தது. தமிழ்நாட்டிலே இந்தி மொழி நுழைவை எதிர்த்துப் போராட்டம் தொடங்கியது.

‘தருமாம்பாள்’ அம்மையார் போராட்டத்தில் கலந்துகொண்டார். அவர்களின் தமிழ்ப்பணியும் வீர உணர்ச்சியும், என்னையும் போராட்டத்திலே கொண்டு சேர்த்தன. போராட்டத்திலே நானும் கலந்துகொண்டு அம்மையாருடன் சிறை சென்றேன்” என்று எழுதினார் மலர்முகத்தம்மையார்.

மொழியுரிமைப் போரில் கைதாகி சிறைவாசம் முடிந்து, 24 ஆண்டுகள் கழிந்த பின்னும் தன் வாழ்வின் பெருமையாக அந்த சிறைத் தண்டனையைக் குறிப்பிடும் மலர்முகத்தம்மையார், திராவிடப் போராளிகளில் ஒருவராக நின்று வழிகாட்டுகிறார். அந்த உரிமை உணர்வை அணையாமல் காப்பதுதான் அவரது போராட்ட வாழ்வுக்கு நாம் செலுத்தும் மரியாதையாகும்.

(வருவார்கள்...)

## சமூக நீதியை உயர்த்திப் பிடிக்கும் அரசு!





தந்தை பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாகவும், புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் கொண்டாடி வருகிறது தமிழ்நாடு அரசு. அந்த வரிசையில், பெருந் தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் அண்ணா பதக்கங்கள் என சமூக மாற்றத்துக்கு வித்திட்ட தலைவர்களைக் கொண்டாடுவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விடவும் பண்பட்ட மாநிலமாகத் திகழ்கிறது.

சென்னை கடற்கரை சாலையில் உலகத் தமிழ் மாநாட்டின்போது நிறுவப்பட்ட தமிழறிஞர்களின் சிலைகள் கழக ஆட்சியின் பெருமைகளைப் பேசக்கூடியவை. அந்த வரிசையில், இப்போது சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் உருவச் சிலையும் வரலாற்றைப் பேச உள்ளது. அதே கடற்கரை சாலையில் சமூக நீதியின்பால் பற்றுகொண்ட ஒரு தலைவரின் சிலையும் கலைஞரால் அமைக்கப்பட்டுள்ளது.

நெருக்கடி நிலையை எதிர்த்த தலைவர்களின் முக்கியமானவர் பாபு ஜெகஜீவன்ராம். துணை பிரதமர் உள்பட முக்கிய அமைச்சரவைப் பொறுப்புகளிலும் இருந்தவர். ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து உயர் பொறுப்புகளில் சிறப்பாகச் செயல்பட்டவர்.

மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா, நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என ஆங்கிலத்தில் (I'm a Dravidian Stock) என்று முழங்கிய போது, நான் பீகாரில் இருந்து வந்த ‘திராவிடன்’ எனக் குறிப்பிட்டவர் ஜெகஜீவன் ராம். சமூக நீதியை உயர்த்திப் பிடித்த அவரது சிலையை, அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள எழிலகத்தின் வளாகத்தில் அமைத்தார் கலைஞர். அந்த சிலை திறப்பு விழாவின்போது ஜெகஜீவன் ராம் குடும்பத்தினரை அழைத்திருந்தார் கலைஞர். இந்த சிலைத் திறப்புவிழாவுக்கு வி.பி.சிங் குடும்பத்தினரை அழைத்திருக்கிறார் இன்றைய முதலமைச்சர்.

இப்போது அதே கடற்கரை சாலையில், மாநிலக் கல்லூரியில் சமூக நீதிக் காவலரின் சிலையை அமைத்து கலைஞருக்குப் பெருமை சேர்த்துள்ளார் நமது முதலமைச்சர். சமூக நீதி மீது நாம் கொண்டுள்ள வேட்கைக்கு இந்தச் சிலைகள் அடையாளமாகும். அந்த வேட்கை வடக்கிலும் பரவ வேண்டும்.

## :ப்ளாஷ்பேக்



### இரண்டாவது கலைஞர் அறிவாலயம்!



ஆர்.பிரபு

2002-ஆம் ஆண்டு ஏப்ரல் 29- ஆம் தேதி கோவை மாவட்டம், சூலூரில் பல்லடம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சூ.சு.பொன்முடி அவர்களின் சீரிய முயற்சியால் சூலூர் நகரக் கழக அலுவலகமாக, ‘கலைஞர் அறிவாலயம்’ கட்டப்பட்டு, கழகத் தலைவர் அன்றைய சென்னை மாநகர மேயர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் திறந்துவைக்கபட்டது. இது ‘கலைஞர் அறிவாலயம்’ என்ற பெயரில், தமிழ்நாட்டில் திறக்கப்பட்ட இரண்டாவது கட்சி அலுவலகமாகும். இந்நிகழ்வைத் தொடர்ந்து, அன்றைய கோவை மண்டலப் பொறுப்பாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களால் ‘சூலூர் தி.மு.க’ வரலாறு நூல் வெளியிடப்பட்டது. அதில் 8 வயது சிறுவனாக கலந்துகொண்டு தளபதி அவர்களிடம் ஆசிபெற்றதை, எண்ணி எண்ணி இன்றளவும் மகிழ்கிறேன்.

**-சூலூர் ஆர்.பிரபு,
மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்,
கோவை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### முதல் கட்சியாக ஆதரிப்போம்

**1978-ஆம் ஆண்டு தொடக்கத்தில் சட்டமன்றக் கூட்டத்தொடர் ஆளுநர் உரை இல்லாமல் தொடங்கியது. அது தொடர்பாக உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டபோது, ‘ஆளுநர் பதவியே அநாவசியம்’ எனக் கூறும் எதிர்க்கட்சியினர் இதற்கு ஏன் குரல் கொடுக்கின்றனர் என, அவை முன்னவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த கலைஞர், ‘ஆளுநர் உரை எப்போதும் இருக்காது எனக் கூறினாலோ அல்லது அந்தப் பதவி தேவையில்லை என ஆளுங்கட்சியினர் தீர்மானம் கொண்டு வந்தாலோ, அதை ஆதரிக்கும் முதல் கட்சியாக தி.மு.க இருக்கும்’ என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**314**




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131